MADRAS COIN SOCIETY

CHENNAI

Special Bulletin
Volume VIII
2001

M.T. Karunakaran
Editor

Save Heritage - Save Coins

With best compliments from

Konica

KONICA COLOUR LABORATORY

- Apex Plaza, 3 Nungambakkam High Road, Chennai - 600 034. Ph.: 8275878
- Ram Mansion, 351-353 Pantheon Road, Egmore, Chennai - 600 008. Ph. : 8262313
- Laxminarain's Tower, 71-72 Walljajah Road, Chennai - 600 002. Ph.: 8534233/8533160
- Al Markaz Complex, 291 Arcot Road, Kodambakkam, Chennai - 600 024. Ph.: 4724384
- F41 Plot 2264 Ground Floor, Annanagar, Chennai - 600 102. Ph.: 6280359
- Jade Terrace, 27 Balfour Road, Kilpauk, Chennai - 600 010. Ph.: 6441110
- Franchisee: Uberoi Ltd. 106 Anna Salai, Chennai - 600 002. Ph.: 8549792

KONICA COLOUR CENTRES

- Sanas, 46 TTK Road, Alwarpet, Chennai - 600 018. Ph.: 4991010
- SIET College Admn. Block 1&2, KB Road, Teynampet, Chennai - 600 018. Ph.: 4352462

MADRAS COIN SOCIETY
CHENNAI

Special Bulletin
Volume VIII
2001

M.T. Karunakaran
Editor

Save Heritage - Save Coins

First Published, 2001

The responsibility for the facts stated, opinions expressed or conclusions reached is entirely that of the contributors and the Madras Coin Society or its office bearers do not accept any responsibility for them.

Published : On behalf of the **Madras Coin Society,** Chennai, by **D. Hemachandra Rao**, No. 8, Illango Nagar Annexe, Virugambakkam, Chennai - 600 092. ✆ 377 1377 / 377 0172

Typeset by : **U.S. Graphics,** 57G MIG Flats, Bharathidasan Colony, K.K. Nagar, Chennai - 600 078. ✆ 489 2661, 471 0511

Printed by : **Bapuji Printers,** 5, Kurban Ali Street, Woods Road, Chennai - 600 002. ✆ 854 9833

"Shri Krishnamurthy's gesture is unique, as the prize instituted in the memory of an eminent Numismatist is bestowed fittingly by an another reputed and well known Numismatist".

Madras Coin Society is proud to dedicate this volume of the Bulletin to the memory of Shri P.L. Gupta, his life, work and achievements.

South Indian Numismatic Society in their Volume XII of 'Studies in South Indian Coins' has published a detailed memoir on Shri P.L. Gupta and those who are interested to know more about him may please go through the same.

M.T. Karunakaran
Hon. Secretary
Madras Coin Society

D.H. Rao
President
Madras Coin Society

CONTENTS

i) About Ourselves

ii) Editor's Note

iii) From the President's Desk

iv) Managing Committee

v) Office bearer's and committee member's, photographs.

		Page No
1.	Numismatic Studies - New Methodalogies and Approaches - *S. Suresh*	1
2.	தமிழகத்தில் கிடைத்த இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள் – *கலாநிதி ப. புஷ்பரட்ணம்*	4
3.	சங்க கால பண்டியர்களின் செப்புக் காசுகள் – *திருமதி. ஆர். சாந்தி*	12
4.	பண்டைய தமிழகக் காசுகளை முன் மாதிரியாகக் கொண்ட இலங்கைக் காசுகள் – *திருமதி. ஆர். சாந்தி*	16
5.	களப்பிரர் காசுகள் – *க.அ. திருஞான சம்பந்தம்*	20
6.	A Note on Copper weight with a legend - *Sankaran Raman*	23
7.	புதுக்கோட்டை நடுகற்கள் – *முனைவர் ஜெ. ராஜா முகமது*	25
8.	மதுரையில் கிடைத்த இளாஞ்சனை – *சங்கரன் இராமன்*	31
9.	வாளால் வழிதிறந்தான் காசு – *ஆறுமுக சீதாராமன், சங்கரன் இராமன்*	35
10.	A new coin of Vijayanagar king - Harihara I (1336-1357) - *Sankaran Raman, L. Selvaraj*	36
11.	Bull type coin of Bukka I - *M.T. Karunakaran*	37
12.	A freak Copper coin of Vijayanagar - *S.M.K. Hameed Jalal*	40
13.	Thirumalaraya's Boar type coins - A fresh reading of the legend - *M.T. Karunakaran*	42

14. Coins of the Kongu Cheras - A reappraisal
- Beena Sarasan 46

15. Two more coins of Madurai Nayak - Sri Ranga Muthu Krishnappa Nayak *- M.T. Karunakaran* 56

16. 'சேதுபதி' என்ற பெயருடன் கிடைத்த ஒரு செப்புக்காசு
– சங்கரன் இராமன் 58

17. Copper coin of Vijayaragava Nayak
- M.T. Karunakaran 60

18. Twenty South Indian Coins from the American Numismatic Society *- Barbara Mears* 64

19. Kursheed Raushan coins of Shahejahan
- Dr. H.B. Maheswari 73

20. Coins of Chanda Sahib *- Dr. V. Jeyaraj* 76

21. Coins of Nawab of Arcot *- M.T. Karunakaran* 82

22. The coinage of Jaisalmer State *- Mrs. Kiran Bala* 84

23. Balayantra coin and 1801 East India Company coin *- Dr. D. Shankaranarayanan* 88

24. A note on Kuligaippanam *- S. Rajavelu* 91

25. நாணயங்களை இனம் காணல் *– மா. பவானி* 93

26. One Rupee coins of British India (from 1835 to 1947)
- SB. Raja Seetharaman 111

27. A Synopsis - English Version of Tamil Papers in this issue *- M.T. Karunakaran, Editor* 120

28. Books on coins *- N. Sampath* 125

Members who made coinex - 2001 Chennai - A grand success 128

Coinex 2001 Chennai Exhibition - Participants and their Exhibits with Award particulars 129

Members of Madras Coin Society (Additional List) 131

Advertisement - Special page S1

Advertisement - Full page F1

Advertisement - Half page H1

About Ourselves

On Sunday the 14th April 1991 - the auspicious Tamil New Year Day, 19 Coin Collectors of Madras assembled at Woodlands Drive-in-Restaurant, 30 Cathedral Road, Madras - 600 086 and adopted the Rules and regulations of the Society and that was the birth of the Madras Coin Society.

Behind the above said event were the real founder members whom the society has honoured in a specially conducted function during the 10th year anniversary celebration.

The Rules and Regulations of the society are modified on subsequent accasions to suit the needs of the society's functioning.

The Madras Coin Society is a non-profit organisation devoted to the collection, study and research of coins medals, tokens, paper money. It has 366 Life Members from various parts of the country; predominently from South India. The Society's main objective is collection conservation and study of coins which are a part of Our National heritage.

Our motto is, "Save Heritage-Save Coins"

In order to achieve the objectives we have been conducting regularly, meetings on fourth Sunday's of every month. Initially the meetings were conducted by rotation in committee members' places. Then when Dr. Gandhi Das, a dedicated member offered his place, the meetings were held there for nearly a year. Afterwards the monthly meetings were conducted in the Museum Campus for a few years and later when the membership grew up and more space was needed, we shifted our meeting place to Lion Edifice Hall at Vaishnav College Campus at Arumbakkam. During the meetings matters on coin and other related items are discussed and are shared by the members.

As a part of our objective we have been holding Exhibitions of Coins, Medals, tokens, paapermoney and others coming under para numismatics, to create awareness among the public about coins as one of the important sources to study our history and culture and also to give an opportunity to collectors to display their collections, for the benefit of those interested in the hobby and study of coins. So far we

have conducted ten yearly exhibitions since 1992. The last one being 'Coiner-2001 Chennai', held during December 2001. The yearly exhibitions were held at Centenary Hall, Govt. Museum, in collaboration with Museum for a few years. But for want of sufficient space to accomodate more exhibits the exhibitions were subsequently conducted at Lion Edifice Hall at Vaishnav College Campus. This year also we propose to hold a National Level Exhibition during August 2002. These yearly exhibitions help bringing to notice several new coins.

Our society also has conducted Seminars on Numismatics; first in collaboration with the Govt. Museum, Chennai and subsequently on our own at the exhibition site. We propose to conduct such seminars on Numismatics regularly.

The society is also bringing out a Special Bulletin every year which is given to all Life Members free of cost. The Bulletin carries research papers on coins and other para numismatic items and is well appreciated and received by scholars.

To our credit, we also have colloborated with a few corporate and private organisations to conduct workshops on Numismatics and have a strong programme in that line for the immediate feature.

We hope to continue our efforts to serve the cause of Numismatics and to fulfil the society's objectives.

We are proud that our society has rightly earned a place of pride in India and especially in the minds of all numismatists.

Editor's Note ...

It is with great pleasure we are releasing one more special Bulletin; Volume VIII, 2001. Once again this publication has been made possible by the sincere efforts of some active members who have gathered enough funds for the publication and by the scholars who have contributed their research papers. My heart felt thanks are to them.

I am sure this volume with a number of papers on new coin finds with illustrations and analysis will be much useful to coin collectors as well as to Numismatists for study and reference. In addition to new coin finds and other numismatic related subject analysis, there is also some coverage of modern coins to enthuse new members. This volume also carries majority of the papers that were presented at the Seminar conducted by the Madras Coin Society during the year 2000.

Dr. Suresh who presided over one of the sessions of the Seminar has in his address, which is reproduced in this volume pointed out that Numismatics had been a poor isolated cousin of history. He goes to the extent of comparing the numismatics studies in Indian universities to that of western countries. He also mentions the facilities available in the museums of western countries for anyone who is interested in viewing the coins. He has a word of praise for the Madras Coin Society for its part in effectively breaking the barriers between the collector and researcher in India.

Dr. Pushparatnam in his paper, 'தமிழகத்தில் கிடைத்த இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள் (Early coins of Sri Lanka Tamils found in Tamilnadu) discusses elaborately the Lakshmi type, Fish symbol and Sethu coins in order to insist on the fact that the coins issued by the early Tamil rulers in Sri Lanka were the ones found in lesser number in Tamilnadu. This and other papers, 'A Note on Kosar's 6-7th century copper weight' by S. Raman 'Coins of Kalabras' by Dr. Thirunanasambandam, 'Classification of coins' (நாணயங்களை இனம் காணல்) by M. Bhavani, a Numismatic research student, who has shown research talent by her detailed analysis of some mediaeval period South Indian coins, one more paper by Sankaran Raman about a Seal found in Kaveri river bed at Madurai,

another paper by him on Sethupathi coin, 'Menhir', (நடுகற்கள்) by Dr. Raja Mohammed, were all some of the papers read at the Seminar 2000 and find place in this volume.

Adding to the above papers Sangam age copper coins of Pandyas (in Tamil) and Early Sri Lankan Tamil coins resembling early Tamilnadu coins (பண்டைய தமிழகக் காசுகளை முன்மாதிரியாகக் கொண்ட இலங்கை காசுகள்) by R. Shanthi, Vallal Vali Tirantan Kasu by Arumuga Seetharaman and S. Raman, An excellent analysis of the Kongu chera coins, by Beena Sarasan in her paper 'Coins of the Kongu cheras – A Reappraisal', An analysis of 'Kuligaip panam' by Rajavel. A strong coverage of Vijayanagara and Nayak coins in a number of separate papers by Karunakaran, Raman and Selvaraj and Hameed Jalal, 'A paper on twenty South Indian Coins from the American Numismatic Society' by Barbara Mears, 'Coins of Chanda Sahib' by Dr. V. Jeyaraj, 'Nawab of Arcot coins' by Karunakaran, Dr. Maheswari's 'Kurshied Rashan coins', paper on 'Balayantra coins' by Dr. Sankaranaryanan, 'Coinage of Jailsalmer' by Kiran Bala, modern coins coverage by Raja Seetharaman and a Book review by N. Sampath are all features in this volume and I am sure will be interesting to those in the field of Numismatics.

M. T. Karunakaran

4, III Cross Street
Jayanagar, Tambaram Sanatorium,
Chennai – 600 047

FROM THE PRESIDENT'S DESK

It gives me greet pleasure to meet you all through this MCS Bulletin. I am sure all of you must have enjoyed our last year's Bulletin which carried a number of research oriented papers on Numismatics and more information about ourselves. This year we celebrated our 10th year of existence. This year, too, is a landmark in our journey in the numismatic world. This year's Coinex-2001 will be our society's tenth continuous exhibition. To make this a memorable event, we have brought out a nice looking special postal cover with special cancellation on the first day of exhibition. It was released by Ms. K. Noorjehan, Postmaster General (northern region), Chennai and duly received by Mr. Chandrasekaran, Dy. General Manager, RBI, Chennai. This cover carried a rupee coin of year 2001 specially fixed in a window and surrounded by photographs of the traditional coins from south. As usual the Coinex-2001 was a success. Our membership has just touched 360 life members.

Our society members were invited by Lucas - TVS, a leading corporate, to display during their annual, Jan. 26th get-together. It was well attended by the staff and their family members. This was followed by a member's participation in an exhibition entirely devoted to Mahatma Gandhi. General public were all in praise for our member's effort. One of the illustrious visitors was scientist, Bharat Ratna Dr. Abdul Kalam, who came unassumingly, went through the exhibits and much appreciated the coins and stamps on Gandhi besides Newspaper cuttings etc. This exhibition was the brain child of Mr. Kalyanam, former private secretary to the Mahatma. Seeing our sincere interest and dedication in the subject, he has graciously announced that his spacious airconditioned hall, could be used by our society for future seminars etc. We thank him for his gesture.

2002, has seen the birth of a new currency system - EURO has come. It is time that we coin lovers, especially those who have special interest in modern coins and not collected European coins, may start collecting these older versions of D. Mark, Francs, Guilders, and Kroners etc, because in a year's time these may become scarce.

A special request to our outstation members - please send your research articles relating to your part of the country and enhance the Bulletin's coverage.

Until we meet in Coinex - 2002, all the best for this year.

D.H. Rao

OFFICE BEARERS



D.H. Rao
President

A. Gnana Baskaran
Vice President



O. Harihariah
Vice President



M.T. Karunakaran
Hon. Secretary
Editor / Librarian

N. Sampath
Hon. Joint Secretary



S.M.K. Hameed Jalal
Hon. Joint Secretary



S. Raman
Hon. Treasurer

COMMITTEE MEMBERS



K. Prasad



M. Lazar



S. Thirumaran



M.K. Chandrasekar



Ramesh Shroff



V.K. Mohan



V.S.K. Jayasingh

V.Ethiraj

Jain G
Hemanth Chopra

S. Syed Akbar

H.B. Maheswari

MADRAS COIN SOCIETY'S MANAGING COMMITTEE

1999 - 2002

Shri D.H. Rao	-	President
Shri A. Gnana Baskaran	-	Vice President
Shri O. Harihariah	-	Vice President
Shri M.T. Karunakaran	-	Hon. Secretary Editor / Librarian
Shri N. Sampath	-	Hon. Jt. Secretary
Shri S.M.K. Hameed Jalal	-	Hon. Jt. Secretary
Shri S. Raman	-	Hon. Treasurer
Shri K. Prasad	-	Member
Shri M. Lazar	-	Member
Shri S. Thirumaran	-	Member
Shri M.K. Chandrasekaran	-	Member
Shri Ramesh Stroff	-	Member
Shri V.K. Mohan	-	Member
Shri V.S.K. Jeyasingh	-	Member
Shri V. Ethiraj	-	Member
Shri Jain G. Hemanth Chopra	-	Member
Shri S. Syed Akbar	-	Member
Shri H.B. Maheswari	-	Member

Editorial Board

Sri O. Harihariah
Sri A. Seetharaman
Sri S. Raman
Sri N. Sampath

Save Heritage - Save Coins

Members who attended the inaugural Meeting of Madras Coin Society

On Sunday the 14th April, 1991 - the auspicious Tamil New Year day the following 19 coin collectors assembled at Woodlands Drive-in Restaurant, 30, Cathedral Road, Chennai - 600 086 and adopted the Rules and Regulations of the Society and that was the birth of the Madras Coin Society.

1.	Mr. O. Harihariah	(Founder Member)
2.	Mr. M. Lazar	"
3.	Mr. V.S.K. Jayasingh	"
4.	Mr. A. Gnana Baskaran	"
5.	Mr. D. Hemachandra Rao	"
6.	Mr. A.V. Krishna Rao	"
7.	Mr. M.T. Karunakaran	
8.	Mr. K. M. Saila	
9.	Mr. Nagesh Somadeva	
10.	Dr. Gandhi Das	
11.	Mr. R. Chitti Babu	
12.	Mr. S. Thirumaran	
13.	Mr. K. Prasad	
14.	Mr. D.C. Thriloknath	
15.	(Late) C.S. Sankaranarayan	
16.	Mr. P.S. Seshadri	
17.	Mr. Vijaykumar Agarwal	
18.	Mr. G.P. Gupta	
19.	Mr. Shah Bharat Manilal	

Numismatic Studies - New Methodologies and Approaches

Summary of Presidential Address Delivered at the Madras Coin Society on 22-12-2000

*S. Suresh**

Esteemed Dr. Vanaja and learned members of the Madras Coin Society: Your Society has bestowed on me the unique honour of being the youngest ever person to preside over one of the academic sessions of your annual seminar. I accept the honour in all humility.

As many of you may know, I am basically an archaeologist and art historian who has ventured into Numismatic studies. My main field of specialization has been Roman coins and medals. This topic may not be of much interest to some of your members because it is basically non-Indian numismatics although Roman Coins have been discovered in India and these coins have greatly influenced early Indian Coinage including the coins of the Tamil Kings of the Sangam period (200 B.C. to 300 A.D.). Of course, I have also worked on certain specific aspects of Indian coinage, mainly relating to South India.

Unlike most other Presidential Addresses : I do not want to give you a lengthy exposition of the coins of any particular series or type.

The papers presented by your members this morning as also those that are to be presented this afternoon and tomorrow reflect a wide variety of topics relating to Indian coins. Hence, I take this opportunity to share with you some of my experiences and thoughts on the latest approaches and methodologies relating to numismatic studies mainly adopted in India and Western countries.

You all know that in the academic arena, numismatics has, for long, been a 'poor isolated cousin' of history. Unfortunately in all Indian universities, Numismatics is relegated to the position of a 'sub-speciality' of 'Archaeology'. Even under such an arrangement, the quantum of time devoted to numismatic studies

*45, IV Street, Padmanabha Nagar Adyar, Chennai - 600 020

is very minimal in all courses and levels of archaeology studies. The situation is lightly better in Western countries mainly U.K. where Numismatics is a well-recognised and well-established field of study in recent years. U.K. has produced a galaxy of eminent numismatists many of whom have even made valuable contributions to Indian numismatics.

Needless to say, the most basic and vital resource for numismatic studies is the very 'coin' in the various public and private collections. In this aspect too, the situation in India poses serious challenges to the students and researchers. Although many Indian museums have good collections of coins, published catalogues of these coins are very, very few. Worse, many museums even do not have proper record of the coins in their possession. The Museums also do not have a fixed and uniform set of rules and regulations for permitting the scholars and researchers to physically examine the coins. Even senior well-known scholars often find it difficult to access the coins in most Indian museums. This is the greatest stumbling block for the furtherance of numismatic studies in our country.

The museums in the West are more liberal in showing their coins to the public. With regard to Indian coins, the biggest and best collection in Europe is in the British Museum, London. The Ashmolean Museum in Oxford and the Fitzwilliam Museum in Cambridge have smaller collections of Indian coins. In U.S. Indian coins are uncommon in Museum collections, the notable exceptions being the Indian coins in the Smithsonian Institution, Washington D.C. and the American Numismatic Society, New York. The Indian coins in both these collections remain mostly unpublished except the Indo-greek coins in the Smithsonian, catalogued and published by Osmund Bopearachchi. Unlike in India, museums in the West have systematic records (mostly computerized) of all their coin holdings. These records are easily available for researchers.

Traditionally, both in India and in the West, coins were used mainly as their source of ancient history, primarily administrative and political history. Most of the earlier studies were, not surprisingly, confined to deciphering the figures and legends on coins and studying physical characteristics such as weight and thickness of coins. The findings of these studies were mostly linked to the politico-administrative system of the period.

The systematic study of Indian coins as sources of economic history began in India in the 1960s, thanks to the efforts of scholars like B.N. Mukherjee and P.L. Gupta. The Study of coins as a source of art history is quite popular in Europe. Most of such studies pertain to the Roman and Byzantine coins. Such studies were almost unknown in India till the early 1990s, B.N. Mukherjee being the sole Indian scholar to have studied this subject in the Indian context from the 1960s. In the 1990s, the Indira Gandhi National Centre for the Arts (IGNCA) undertook a big-project of documenting and studying the numismatic art of India. The results of this study are to be shortly published in a series of volumes. This is the biggest numismatic research project ever undertaken in Asia.

Again unlike in India in the West the coin collector and the coin researcher freely interact and exchange ideas and information with one another. In this context, I am extremely happy that the Madras Coin Society has effectively broken the artificial barriers between the 'collector' and the 'researcher' in India. Indeed, many of your members who were earlier, merely 'collectors' have now also become 'researchers'. And your members have always been very liberal in showing their coins and sharing information about their new finds with outside scholars. I am sure that this fruitful interaction between these two 'communities' will grow in the near future.

I have merely outlined some of the trends and approaches to numismatic studies in India and the West. I hope my thoughts have been of some benefit to your members. I conclude with all good wishes to your Society.

2

தமிழகத்தில் கிடைத்த இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்

கலாநிதி ப. புஷ்பரட்ணம்

பண்டுதொட்டு தமிழகத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் பெரும்பாலானவை சமகாலத்தில் இலங்கையிலும் புழக்கத்தில் இருந்துள்ளன (Codrington 1924, Bopearachchi 1998, 1999). இதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகள் காரணமாகும். ஆயினும் தமிழக நாணயங்கள் இலங்கையில் கிடைத்த அளவிற்கு இலங்கை நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்ததெனக் கூறுவதற்கில்லை. இலங்கையில் தொன்று தொட்டு தமிழ் அரச மரபும், நாணயங்களின் வெளியீடும் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு (புஷ்பரட்ணம் 1999, 2000). ஆயினும் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட தமிழ் அரசு தோன்றியதென்ற கருத்து நிலவி வருவதால் அதற்கு முற்பட்ட கால தமிழர் நாணயங்கள் அனைத்தும் தமிழ் நாட்டு வம்சங்களால் வெளியிடப்பட்டவை எனக் கூறப்பட்டு வந்துள்ளது. ஆனால் இலங்கையில் பரவலாகக் கிடைத்து வரும் தமிழர் நாணயங்களில் ஒருசிலவகை நாணயங்களே அரிதாகத் தமிழகத்தில் கிடைத்துள்ளன. மேலும் அவை பல்வேறு அம்சங்களில் தமிழ் நாட்டு வம்சங்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் இருந்து வேறுபடுகின்றன[(1)]. இவற்றின் அடிப்படையில் அவற்றை இலங்கைத் தமிழர் வெளியிட்ட நாணயங்களாக அறுதியிட்டுக் கூறமுடிகிறது. அவற்றுள் தமிழகத்தில் கிடைத்த இலங்கைத் தமிழர் நாணயங்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

லக்ஷ்மி நாணயங்கள்

இலங்கையில் வகையிலும், தொகையிலும் பல வட்டாரங்களில் கிடைத்த நாணயங்களில் பெண் உருவம் பொறித்த நீள் சதுர நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. 1917இல் வடஇலங்கையில் கந்தரோடையில் இவ்வகை நாணயங்கள் பலவற்றைக் கண்டு பிடித்த **போல் பீரிஸ்** என்பவர் இதற்கு லக்ஷ்மி நாணயங்கள் எனப் பெயரிட்டார் (Peris 1922:11-20). அப்பெயரே இற்றைவரை இந்நாணயத்திற்குரிய பெயராக இருந்து வருகிறது. இப்பெண் உருவம் பெரும்பாலான நாணயங்களின் முன்புறத்தில் தாமரை மீது அமர்ந்த நிலையிலும், வேறு பல நாணயங்களில் தலைவிரிகோலமாக அமர்ந்த நிலையிலும் காணப்படுகிறது. இப்பெண் உருவத்துடன் சுவஷ்திகா, தாமரை, யானை, சிவலிங்கம், வேல், மயில், சேவல், திரிசூலம், காளை போன்ற சின்னங்களும் இடம்பெற்றுள்ளன (Parkar 1981 Seyone 1998).

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

இவற்றின் அடிப்படையில் இவற்றை வெளியிட்டவர்கள் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறமுடிகிறது (புஷ்பரட்ணம் 2000:94–107). அகழ்வாய்வில் பெறப்பட்ட கலாச்சாரச் சின்னங்களுடன் இந்நாணயங்கள் கிடைத்திருப்பதைக் கொண்டு இவை கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புழக்கத்திலிருந்திருக் கலாம் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது (Bopearachchi 1998:154).

இவ்வகை நாணயங்கள் தமிழகத்தில் மிக அரிதாகச் சங்ககாலச் சேரரின் தலைநகரான கரூரில் மட்டும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (Nagaswamy 1995:37-39). இவற்றின் அடிப்படையில் இவை தமிழகத்தில் வெளியிடப்பட்டு வணிகத் தொடர்பால் இலங்கை சென்றிருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது (Krishnamurthy Vol. LII:59-61). ஆனால் தமிழகத்தில் குறிப்பாகச் சங்க காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களின் பின்னணியில் வைத்து நோக்கும் போது இக்கருத்து பொருத்தமாகத் தோன்றவில்லை.

சங்க கால மூவேந்தரும், குறுநில மன்னர்களும் வெளியிட்ட நாணயங்களின் பின்புறத்தில் அவர்களின் குலமரபுச் சின்னம் முக்கிய அம்சமாக இடம்பெற்றிருந்தது. ஆனால் லக்ஷ்மி நாணயங்களில் அந்த அம்சம் காணப்படவில்லை. சங்க காலத்தில் பெரும்பாலும் சதுர மற்றும் வட்ட வடிவிலே நாணயங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் லக்ஷ்மி நாணயங்கள் போல் நீள் சதுர வடிவில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. லக்ஷ்மி நாணயங்களின் பின்புறத்தில் பீடத்துடன் கூடிய சுவஷ்திகா காணப்படுகிறது. பண்டுதொட்டு இந்திய நாணயங்களில் சுவஷ்திகா முக்கிய சின்னமாக இடம்பெற்றுள்ளது. ஆனால் பீடத்துடன் கூடிய சுவஷ்திகாவை சங்க கால நாணயங்களில் மட்டுமன்றி இந்தியநாணயங்கள் எதிலும் காண முடியவில்லை. இது இலங்கைக்கேயுரிய சிறப்பம்சமாகும். இதன் தோற்றத்தை இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணலாம். தமிழகத்தில் வெளியிடப்பட்ட சங்க கால நாணயங்கள் அங்கு பரவலாகக் கிடைத்திருக்கும் போது இலங்கையில் அவை மிக அரிதாகக் கிடைத்துள்ளன. அதேவேளை இலங்கையில் பரவலாகக் கிடைக்கும் லக்ஷ்மி நாணயங்கள் மிக அரிதாகக் கரூரில் மட்டும் கிடைத்துள்ளன. மேலும் இந்நாணயங்களுக்குரிய சுடுமண் அச்சுக்கள் பல இலங்கையில் கிடைத்துள்ளன (Bopearachchi 1999:12-13). இவற்றின் அடிப்படையில் இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் வர்த்தகத் தொடர்பால் தமிழகம் சென்றதைக் கரூரில் கிடைத்த லக்ஷ்மி நாணயங்கள் உறுதிப்படுத்துவதாகக் கூறுவதே பொருத்தமாகும்.

மீன்சின்ன நாணயங்கள்

அண்மைக்காலத்தில் நாம் மேற்கொண்ட களஆய்வின் போது வடஇலங்கையில் கி.பி: 11ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பட்டதாகக் கணிக்கக் கூடிய பல வகை நாணயங்கள் கிடைத்துள்ளன. இவ்வகை நாணயங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு கண்டுபிடிக்கப்பட்டதை நாணயவியலாளர் பலர் தமது

நூல்களில் குறிப்பிட்டுள்ளனர் (Prinsep 1858:419-423, Codrinton 1924:89, Mahadevan 1970:111-120). 1966 இல் **டுல்பேயும்**, அண்மையில் **மிற்சனரும்** தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் பற்றி ஆராய்ந்த போது வடஇலங்கையில் கிடைத்த நாணயங்கள் பற்றியும் சிறப்பாக ஆராய்ந்துள்ளனர். இவற்றைச் சின்னங்களின் அடிப்படையில் பல வகையாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவு நாணயங்களில் இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் பீடத்தின் மேல் அமர்ந்த காளை உள்ளது. இதற்கு இருபுறமும் குத்துவிளக்கும், மேலே பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் கிடையாக அல்லது பக்கவாட்டில் இரு மீன் சின்னங்கள் காணப்படுகின்றன. இரண்டாவது பிரிவு நாணயங்களில் நடுவில் செண்டும் அதன் இருபக்கத்தில் மீன் சின்னமும், பின்புறத்தில் மூன்று மீன் சின்னமும். மூன்றாவது பிரிவு நாணயங்களின் முன்புறத்தில் பலிபீடத்துடன் கூடிய குதிரையும், பின்புறத்தில் மூன்று மீன்சின்னமும் காணப்படுகின்றன.



முதலாவது வகை



இரண்டாவது வகை

மேற்கூறப்பட்ட நாணயங்களின் பின்புறத்தில் மீன் முக்கிய சின்னமாக இருப்பதினால் இவற்றைத் தமிழகப் பாண்டிய மன்னர்களே வெளியிட்டார்கள் என்பது பொதுவான கருத்தாகும். ஆனால் இந்நாணயங்களின் வடிவமைப்பு,

சின்னங்கள் என்பவை சமகாலத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் இருந்து முற்றாக வேறுபட்டது. குறிப்பாகப் பீடத்துடன் கூடிய மீன், காளை பாண்டிய நாணயங்களில் காணப்படாத ஒன்றாகும். அத்துடன் இந்தவடிவுடைய மீன் சின்னங்கள் பாண்டியர் காலத் தமிழக நாணயங்களில் அறியப்படாத ஒன்றாகும். மூன்று மீன் சின்னங்கொண்ட நாணயங்களைப் பாண்டியர் வெளியிட்டதற்கு தமிழகத்தில் இதுவரை சான்றுகள் இல்லை. வடஇலங்கையைப் பாண்டியர் வெற்றி கொண்ட போது அங்கு இரு மீன் சின்னத்தையே பாண்டியர் தமது கொடியில் பொறித்ததாகக் குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுகிறது (Puthukoddai Inscriptions, 239No. 366). இதுவரை வெளிவந்த தமிழக நாணயங்கள் தொடர்பான அனைத்து நூல்களிலும் இவ்வகை நாணயங்கள் வடஇலங்கையில் கிடைத்ததாகவே குறிப்பிட பட்டுள்ளன (Biddulph 1966, Mitchiner 1998:32-35). இவற்றின் அடிப்படையில் இவை இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் எனக் கூறுவது முற்றிலும் பொருத்தமாகும்.

ஆனால் முதலாவது வகை நாணயங்கள் நாணயவியலாளர் அளக்குடி ஆறுமுக சீதாராமனால் அரிதாக மதுரையிலும், தஞ்சாவூரிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது[2]. ஒரிரு நாணயங்கள் சென்னையைச் சேர்ந்த நாணயவியலாளர் சங்கர் இராமனது சேகரிப்பில் இருப்பதை நேரில் பார்த்துள்ளேன். இவை இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான வர்த்தகப், பண்பாட்டுத் தொடர்பால் அங்கிருந்து வந்தவை என்பதில் சந்தேகமில்லை.

சேது நாணயங்கள்

தமிழகத்தில் கிடைத்துவரும் நாணயங்களில் சேது என்னும் மொழி பொறித்த நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் கிடைத்த இலங்கைத் தமிழர் நாணயங்களில் இவை எண்ணிக்கையில் அதிகமாகும். இவை வடஇலங்கையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களாகும். (Pathmanathan 1980:409-417), பொதுவாக இந்நாணயத்தின் முன்புறத்தில் நிற்கும் அல்லது இருக்கும் நிலையில் மன்னன் உருவமும் பின்புறத்தில் சூரியன், சந்திரனுடன் வலப்புறம் பார்த்த நிலையில் நந்தியும் அதற்கு கீழே தமிழில் சேது என்ற மொழியும் காணப்படும். சில நாணயங்களில் முன்புறத்தில் பீடத்தின்மேல் அமர்ந்த நிலையில் நந்தியும், பின்புறத்தில் எட்டு இதழ் கொண்ட தாமரை மலரில் நடுவில் சேது என்ற மொழியும் காணப்படும். தமிழகத்தில் பெரும்பாலும் முதலாவது வகை நாணயங்களே அதிகமாகக் கிடைத்துள்ளன.



முன்புறம்



பின்புறம்

தமிழகத்தில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு ஆராயப்பட்ட போதிலும் நீண்ட காலமாக இவற்றை இலங்கைத் தமிழர்களே வெளியிட்டார்கள் என்பதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. முதன் முதலில் இந்நாணயங்கள் பற்றி ஆராய்ந்த **பிறின்செப்** இவற்றை தென்னிந்தியாவில் கிடைத்த நாணயங்களுடன் தொடர்பு படுத்தினார் (Prinsep's 1858:419-424). இதே காலப்பகுதியில் இந்நாணயங்களை ஆராய்ந்த **எலியட்** இவற்றைச் சோழ மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களாக இருக்கலாம் எனக் குறிப்பிட்டார். (Elliot 1970:152G, No.72c). இவர்களைத் தொடர்ந்து இந்நாணயங்களை ஆராய்ந்த **ஹைஸ் டேவிட்ஸ்** (Rhys Davids) பாண்டி நாட்டுப்புழக்கத்திற்காகச் சிங்கள மன்னன் முதலாம் பராக்கிரமபாகு வெளியிட்டதாகக் கூறினார். முதன் முதலில் **திரேசு சுவாமியார்** (Rev. Tracey) என்பவர் இராமநாதபுரத்துச் சேதுபதிகள் வெளியிட்ட சேதுபதி என்ற மொழி பொறித்த நாணயங்களுக்கும், சேது என்ற மொழி பொறித்த நாணயங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி சேது மொழி பொறித்த நாணயங்கள் இலங்கையில் சிறப்பாக வடஇலங்கையில் கிடைப்பதைக் கொண்டு இவை இலங்கையிலேயே வெளியிடப்பட்டதாகக் கூறினார் (Tracey 1889-94:1-12). சுவாமி ஞானப்பிரகாசர் தமக்குக் கிடைத்த 70 சேது நாணயங்களை ஆய்வுக்கு அடிப்படையாகக் கொண்டு இவற்றை நல்லூரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்த யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் என்ற கருத்தைத் தக்க சான்றுகளுடன் வெளியிட்டார் (Gnana prakasar 1920:172-179). பிற்காலத்தில் தமிழகத்தில் மேலும் பல இடங்களில் சேது நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவை பற்றி அதிகம் ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை. இதுவரை எமக்குத் தெரிந்தவற்றுள் ஆறுமுக சீதாராமனின் கட்டுரை ஒன்றே தமிழகத்தில் கிடைத்த சேது நாணயங்களை இலங்கைத் தமிழ்

மன்னர்களுடன் தொடர்புபடுத்திய முதல் ஆய்வாகத் தெரிகிறது. இவர் தென்தமிழ் நாட்டில் குறிப்பாக இராமேஸ்வரம், தஞ்சாவூர் போன்ற இடங்களில் கிடைத்த இந்நாணயங்களை பிற்காலத் தமிழக மறவர் நாணயங்களுடன் தொடர்புபடுத்தி ஆய்ந்துள்ளமை கவனத்தில் கொள்க.

கந்தன் பெயரில் நாணயம்

யாழப்பாண மன்னர்கள் சேது என்னும் மொழி பொறித்த நாணயங்களை மட்டுமே வெளியிட்டார்கள் என்ற கருத்து நீண்டகாலமாக இருந்து வந்தது. ஆனால் அண்மைக்காலத்தில் கிடைத்த நாணயங்களில் இருந்து இவர்கள் கந்(தன்), ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயரிலும் நாணயங்கள் வெளியிட்டமை தெரியவந்துள்ளது (புஷ்பரட்ணம் 2000:197–212). இவற்றின் முன்புறத்தில் மயில், வேல் போன்ற சின்னங்களும் பின்புறத்தில் **"கந்"**, **"ஆ"** போன்ற எழுத்துக்களும் உள்ளன. இவை கந்தன், ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயர்களின் சுருக்கமாகும். இவற்றுள் **"கந்"** என்ற பெயர் கொண்ட நாணயம் சேது நாணயத்தைப் போல் உள்ளது. இந்நாணயம் ஈரோடு கலைமகள் கல்லூரி அருங்காட்சியகத்திலும், அவ்வட்டாரத்தைச் சேர்ந்த பேராசிரியர் திருஞானசம்பந்தத்திடமும் உள்ளன[3]. இவை கரூரில் இருந்து கிடைத்த நாணயங்களாகக் கூறப்படுகிறது. யாழ்பாண அரசு கால இலக்கியங்கள் இக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலான நெருங்கிய உறவு பற்றிப் பல இடங்களில் கூறுகின்றன. அவற்றைத் தமிழகத்தில் கிடைத்த நாணயங்களும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. இலங்கைத் தமிழருடனான உறவு ஒருபக்க உறவாகவே இருந்ததாகக் கூறப்பட்டு வந்தது. ஆனால் தமிழகத்தின் அண்மைக் கால ஆய்வுகள் இருபக்க உறவு என்பதைக் காட்டுகின்றன. இதைத் தமிழகத்தில் கிடைத்த இலங்கைத் தமிழர் நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன.

முன்புறம்



பின்புறம்

அடிக்குறிப்பு

1) இலங்கையில் கிடைத்த தமிழர் நாணயங்களை இலங்கைத் தமிழர்களே வெளியிட்டார்கள் என்ற கருத்தை ஏற்படுத்த ஆறுமுக சீதாராமனின் கண்டுபிடிப்புக்களும், கருத்துப் பரிமாறல்களும் பெரிதும் உதவின.

2) உரையாடலின் போது ஆறுமுக சீதாராமன் கூறிய செய்தி.

3) திருஞானசம்பந்தத்திடம் நேரில் பார்த்தவை.

உசாத்துணை நூல்கள்

சீதாராமன், ஆறுமுக, 1989, மறவர் நாணயங்கள், 9.12.1989 இல் சிவகங்கை வரலாற்றுப்பேரவையில் நடந்த வரலாற்றுக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.

புஷ்பரட்ணம், ப., 1998, அண்மையில் வடஇலங்கையில் கிடைத்த லக்ஷ்மி நாணயங்கள் ஒரு மீள் பரிசீலனை, ஒன்பதாவது தமிழக தொல்லியல் கழக ஆய்வரங்கு, புதுக்கோட்டை. 1–12.

புஷ்பரட்ணம், ப., 2000, தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.

Biddulph, C.H. 1966, *Coins of Pandyas, NNMno* 11 of the Numismatic Society of India.

Bopearachchi, O., 1998, Archaeological Evidence on Changing Patterns of International Trade Relation of Ancient Sri Lanka in Origin and Circulation of Foreign Coins in the Indian Ocean, (E.D), Bopearachchi, O. and Weerakkody, D.P.M, Sri Lanka Society for Numismatic Studies and French Mission of Archaeological Cooperation in Sri Lanka, New Delhi.

Codrington, H.W. 1924, *Coins and Currency, Memoirs of the Colombo Museum,* Series A, No. 3, Colombo.

Elliot, W. 1970, *Coins of South India*, Prithivi Prakasan, Varanasi.

Gnanapragasar, S. *The forgotten Coinage of the Kings of Jaffna,* Ceylon Antiquary, 5.

Krishnamurthy, R., 1997, *Sangam Age Tamil Coins,* Garnet Publications, Madras.

Krishnamurthy, R., 1991, *Oblong Coin With a Mother Goddess Symbol from Karur,* Tamilnadu in Journal of the Numismatic Society of India, 53:59-61.

Mitchiner, M 1998, *The Coinage and History of Southern India,* Hawkins Publication.

Nagaswamy R., 1995, *Roman Karur,* Brahad Prakashan, Madras.

Pathmanathan, S., 1980, *Coins of Medieval Sri Lanka: The Coins of the Kings of Jaffna,* Spolia Zylanica, Vol. 35, part I and II:409-417.

Peris, P.E., 1922, *Nagadipa and Buddhist Remains in Jaffna Part.* I in journal of the Royal Asiatic Society Ceylon Branch, 11-20.

3

சங்ககால பாண்டியர்களின் செப்புக்காசுகள்

திருமதி ஆர். சாந்தி,

சென்னை அரசு அருங்காட்சியகம் ஆரம்ப காலத்தில் அரும்பொருட்களின் சேகரிப்பை புதைப்பொருட்கள் வழியாக மட்டுமின்றி தனியாரிடம் இருந்து விலைக்கு வாங்கியும், பரிமாற்றங்கள் முறையிலும் பெருக்கியுள்ளது.

இவற்றில் நாணயவியல் பிரிவில் தனியாரிடம் இருந்து விலைக்குப் பெறப்பட்ட சில செப்பு நாணயங்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவைகளில் இரு செப்பு நாணயங்கள் சங்ககால பாண்டியரின் நாணயங்களாக இனம் காணப்பட்டுள்ளன. இவ்விரு நாணயங்களைப் பற்றிய குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

நாணயம் 1

உலோகம் : செப்பு வடிவம் : சதுரம் எடை : 6.46 கிராம் அளவு :1.8x 1.8 செ.மீ.

முன்புறம்

பின்புறம்

முன்புறம் : யானை ஒன்று வலதுபக்கம் பார்த்து நிற்கிறது. அதன் முகத்திற்கு நேராக நாணயத்தின் வலதுபக்க விளிம்பை ஒட்டியவாறு வேலி காணப்படுகிறது.

யானையின் தலைக்கு மேல் நாணயத்தின் வலதுபகுதியின் ஓரத்தில் மூன்று வளைவுகள் கொண்ட குன்று உள்ளது.

நாணயத்தின் இடதுபக்க ஓரத்தின் கீழே யானைக்கு பின்னால் மூன்று இலைகள் கொண்ட செடி ஒன்று தெரிகிறது.

**காப்பாட்சியர், நாணவியல் பிரிவு, அரசு அருங்காட்சியகம், சென்னை.*

நாணயத்தின் மேல் இடதுபக்கத்தில் யானைக்கு மேலே ஒரு தொட்டியும் அதில் இரண்டு ஆமைகள் ஒன்றையொன்று பார்த்தவாறும் காணப்படுகின்றன.

கோடுகளால் சித்தரிக்கப்பட்டுள்ள மீன் சின்னம். மேற்கண்ட இந்த செப்பு நாணயம் மதுரையைச் சார்ந்த தனியாரிடம் இருந்து விலைக்கு வாங்கப்பட்டது.

நாணயம் 2

உலோகம் : செப்பு வடிவம் : சதுரம் எடை : 11.611 கிராம் அளவு : 2 x 2 செ.மீ.

முன்புறம்

பின்புறம்

முன்புறம் : நாணயத்தின் மேல் இடது பகுதியில் உள்ள தொட்டியில் ஐந்து ஆமைகள் உள்ளன. அதற்கு கீழே படுத்த நிலையில் இடமிருந்து வலமாக ஒரு செடி காணப்படுகிறது.

இச்சின்னங்களுக்கு கீழே நாணயத்தின் இடது பகுதியில், வலதுபக்கம் பார்த்து காளை ஒன்று நிற்கிறது. காளையின் திமில் மிக இயல்பான வகையில் பொறிக்கப்பட்டுள்ளது.

காளையின் முகத்திற்கு எதிரில் வலதுபக்க ஓரத்தில் சக்கரம் ஒன்றும், அதற்கு மேலே எருதுதலை ஒன்றும் காணப்படுகின்றன.

பின்புறம் : கோடுகளால் சித்தரிக்கப்பட்டுள்ள மீன் சின்னம். இந்நாணயம் திருச்சபைச் சார்ந்த தனியாரிடம் இருந்து வாங்கி தொகுப்பில் சேர்க்கப்பட்டது.

ஒப்பீடு : இருநாணயங்களும் சதுரவடிவில் உள்ளன. இரு நாணயங்களிலும் பின்பக்கதில் சங்ககால பாண்டிய மன்னர்கள் நாணயங்களில் உள்ளதுபோல் அரசு சின்னமான மீன் கோடுகளால் சித்தரிக்கப்பட்டுள்ளன.

இரு நாணயங்களிலும் முன்பக்கத்தில் தொட்டியில் ஆமைகள் காணப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் செடிகள் உள்ளன.

கருத்தறிவிப்பு : பண்டைய தமிழ்நாட்டின் நீர்வளச் சிறப்பைக் காட்டும்

வகையில் நீர்வாழ் உயிரினங்களாகிய ஆமை, மீன் போன்றவற்றின் உருவங்கள் இடம் பெற்றிருக்கலாம் என்று கருதலாம்.

'சங்ககால தமிழ் நாணயங்கள்' என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அகநானூறு பாடலில் 'அழல் எழுதித்தியம் அடுத்த யாமை' என்று வருவதால் பாண்டிய மன்னர்கள் வேள்விகளில் ஆமையை பயன்படுத்தி இருக்கலாம் என்றும், அதை குறிக்கும் வகையில் ஆமைகள் இவர்களது நாணயங்களில் இடம் பெற்றுள்ளன என்று கருத வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கிறார்.

ஆமை, மீன் போன்றவை விஷ்ணுவின் அவதார சின்னங்களாவதுடன் சக்கரமும் நாணயங்களில் இடம் பெறுவதால் இவைகளை வெளியிடும் மன்னர்கள் வைணவர்களாக இருக்காலம் என எண்ணத் தோன்றுகிறது.

இந்நாணயங்களில் இடம் பெற்றுள்ள செடிகள், குன்று மற்றும் எருதின் தலை ஆகியவற்றை பார்க்கையில் அக்கால மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்துள்ளனர், என்பதுடன் நிலவளத்தைச் சிறப்பிக்கும் வகையில் இச்சின்னங்கள் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன என்று கருத வாய்ப்புள்ளது.

நாணயங்களின் காலம் கணித்தல் : பொதுவாக நாணயங்களில் காணப்படும் சின்னங்களைக் கொண்டு அவைகளில் காலத்தைக் கணிப்பது என்பது அரிய செயலாகும்.

நாணயங்களில் எழுத்துக்கள் இல்லாத பொழுது அவற்றில் இடம் பெற்றுள்ள அரச வம்ச சின்னத்தையும், அதன் அமைப்பையும் கொண்டு அந்நாணங்கள் எந்த வம்ச மன்னர்களால் வெளியிடப்பட்டிருக்காலம் என்பதைக் கூறலாம். ஆனால் எம்மன்னர் வெளியிட்டார் என்பதைக் கூறுவதற்கில்லை.

எனினும் சில குறிப்பிட்ட சின்னங்களில், குறிப்பிட்ட அமைப்பில், குறிப்பிட்ட வகை நாணயங்களில் பரவலாக இடம் பெறும் பொழுது அவைகள் இனம் காணப்பட்டு காலம் கணிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இவ்வகை நாணயங்களுடன் அவைகளை ஒத்த வகையில் உள்ள நாணயங்களை ஒப்பிட்டு காலம் கணிக்க ஏதுவாகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளத்தில் நடத்திய அகழாய்வில் சங்ககாலப் பாண்டியர்களின் செப்பு காசுகள் இரண்டு கிடைத்துள்ளன.

அவைகளில் ஒன்றில் யானை, வேலியிலுள்ள மரம், சக்கரம் கும்பம் போன்ற சின்னங்கள் முன் பக்கத்திலும், மீன் சின்னம் கோட்டுருவில் பின்பக்கத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.

மற்றோர் செப்பு நாணயத்தில் முன்பக்கத்தில் காளை உருவம், அதன் முகத்திற்கு கீழ் தொட்டியும், பின்பக்கத்தில் கோட்டுருவில் மீன் சின்னம் காணப்படுவதாக திரு. நடன காசிநாதன் அவர்கள் தனது 'தமிழர்காசு இயல்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். அவர் வெளியிட்டுள்ள அந்நாணயங்களின் நிழற்படமும் இதற்கு ஆதாரமாக உள்ளன.

மாம்பலம், வெம்பாவூர், வீரசிகாமணி ஆகிய இடங்களில் புதைப்பொருளாகக் கிடைத்த வெள்ளி முத்திரை நாணயங்களில் இங்கு தரப்பட்டுள்ள நாணயங்கள் காணப்படும் ஆமை சின்னங்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் கிடைத்த புதைப்பொருள் நாணயங்களில் இந்த முத்திரை நாணயங்கள் கி.மு. 250 கி.மு. 150க்கும் இடைப்பட்ட காலமாக நாணயவியல் வல்லுநர் திரு பி.எல். குப்தா அவர்கள் கணித்துள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு ஆமைகள் சின்னம் கொண்ட தம்மிடம் உள்ள சதுர வடிவ நாணயங்களை திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கி.மு. 200க்கும் கி.மு. 150க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததாகக் கணிக்கிறார்.

எனவே மேற்கண்ட கூற்றுகளின் அடிப்படையில் இவ்வாறு செப்பு நாணயங்களும் அவற்றில் காணப்படும் சின்னங்களின் அமைபுகள் அடிப்படையில் ஒப்பிட்டு இவைகள் சங்ககால பாண்டியன் நாணயங்கள் என்றும், இவைகள் கி.மு. 200க்கும்–150க்கும் இடைப்பட்ட காலம் என்றும் கருதப்படுகிறது.

சங்ககால நாணயங்கள் புதைபொருளாக அதிக அளவில் கிடைக்கப் பெறவில்லை என்றாலும் சமீப காலங்களில் இவ்வகை நாணயங்கள் தனியார் தொகுப்பில் இருந்து இனம் காணப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இதுவரை வெளியிடப்படாத மேற்கண்ட இவ்விரு நாணயங்களும் மதுரை மற்றும் திருச்சியைச் சார்ந்த தனி நபர்களிடம் இருந்து பெறப்பட்டிருந்தாலும் சங்ககால பாண்டியர் வரலாற்றுக்கு இவைகள் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன என்றால் மிகையல்ல.

அடிக்குறிப்புகள் :

1. R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins*, 1997.
2. P.L. Gupta and Hardarker T.R. *Ancient Indian Silver Punch Marked Coins of the Magadha-Maurya Karchapana Series*, p. 1.
3. K.A. Nilakanta Sastri, *The Sangam Age, its Cults and Culture*, Madras 1972,
4. திரு. நடன காசிநாதன் – 'தமிழர் காசு இயல்' – 1994
   நாணயங்களின் வரைபடம்
   நாணயங்களின் நிழற்படம்

4

பண்டைய தமிழகக்காசுகளை முன்மாதிரியாகக் கொண்ட இலங்கைக் காசுகள்

திருமதி இரா. சாந்தி

சென்னை அரசு அருங்காட்சியக நாணயவியல் பிரிவில் உள்ள இனம் கண்டறியப்படாத செப்பு நாணயங்களில் இரு அரிய செப்பு நாணயங்கள் பண்டைய தமிழரின் காசுகளை முன் மாதிரியாகக் கொண்டு வெளியிடப்பட்ட இலங்கை காசுகளாக கருதப்படுகிறது. இவ்விரு செப்புக் காசுகளும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த தனி நபரிடம் இருந்து பெறப்பட்டவைகள்.

நாணயம் 1

நாணயங்களைப் பற்றிய குறிப்பு :

உலோகம் : செம்பு வடிவம் : சதுரம் 1.7 x 1.7 செ.மீ. எடை : 3.56 கிராம்



முன்புறம்



பின்புறம்

முன்புறம் : வலதுபுறம் நோக்கி நிற்கும் திமிலுடன் கூடிய காளை. அதன் முகவாய்க்கு கீழே ஒரு உயர்ந்த பாத்திரம். எழுத்துக்கள் ஏதும் இல்லை. காளையை சுற்றி சதுர கட்டம். அதற்கும் நாணயத்தின் விளிம்பிற்கும் இடையே சதுரமாக மிகச் சீரான இடைவெளியில் புள்ளிகள்.

பின்புறம் : நாணயத்தில் மையத்தில் மூன்று புள்ளிகள். இவைகளைச் சுற்றி ஒரு வட்டம். அதனை அடுத்த சதுர வடிவக் கட்டத்திற்கும் நாணயத்தின் விளிம்பிற்கும் இடையே முன்பக்கம் உள்ளது போல் சீரான புள்ளிகள்.

காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு, அரசு அருங்காட்சியகம், சென்னை.

நாணயம் 2

முன்புறம்

உலோகம் : செம்பு வடிவம் : சதுரம் 1.7 x 1.7 செ.மீ. எடை : 3.57 கிராம்

முன்புறம் : இடதுபுறம் நோக்கி நிற்கும் திமிலுடன் கூடிய காளை. மற்றவை முதல் நாணயத்தில் உள்ளவாரே

பின்புறம் : முதல் நாணயத்தில் உள்ளது போல்

1) சங்ககால பாண்டியரின் சில செம்பு நாணயங்களிலும், முன்புறத்தில் திமிலுடன் கூடிய காளை இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் நிற்கும் நிலையில் பொறிக்கப்பட்டு, அதன் முகவாய்க்கு கீழே உயர்ந்த பாத்திரம் ஒன்று காணப்படுகிறது. பின்புறத்தில் மீன்வடிவம் கோடுகளால் காண்பிக்கப்பட்டுள்ளது.

2) சங்ககாலச் சேரர்களின் சில செப்பு நாணயங்களிலும் திமிலுடன் கூடிய காளை உருவம் நின்ற நிலையில் காணப்படுகிறது.

3) முற்கால பல்லவர்களின் செப்பு நாணயங்களிலும் திமிலுடன் கூடிய காளை நின்ற நிலையில் காணப்படுகிறது.

4) இம்மன்னர்களின் ஒரு நாணயத்தில் முன்புறம் சிங்கமும், பின்புறத்தில் நான்கு புள்ளிகள் அதனைச் சுற்றி ஒரு வட்டம் மிக நேர்த்தியாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு புள்ளிகளும் எடையைக் குறிக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேற்கண்ட நாணயங்களில் காணப்படும் எருது சின்னங்கள் மற்றும் பின்புறத்தில் உள்ளபுள்ளிகளைக் கொண்டு ஒப்பிடுகையில் இங்கு தரப்பட்டுள்ள இரு செப்பு நாணயங்களும் பண்டையத் தமிழ் மன்னர்களின் நாணயங்கள் என்று கருத வாய்ப்பு உள்ளது. எனினும் இந்நாணயங்கள் தமிழ்நாட்டில் புதைபொருளாகவோ அதிக அளவிலோ இதுவரைக் காணப்படவில்லை என்பதனை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

நமது தொகுப்பில் உள்ள நாணயங்களை ஒத்த நாணயங்களைப் பற்றிய நாணயவியல் ஆய்வாளர்கள் கருத்துகளையும் ஒப்பிடுகையில் மேற்கண்ட கருத்து ஏற்புடையதாக இல்லை.

5) திரு பி.யு. அபெல்ஸ் என்ற ஆய்வாளர் இத்தகைய செப்புக்காசு ஒன்றை தாம் ஜெர்மனியில் வாங்கியதாகவும் அதனை ஆய்வு செய்ததில் அது ஏறக்குறைய பல்லவர் நாணயத்தை ஒத்து காணப்படுகிறது. எனினும் அதில் காணப்படும் எழுத்துக்கள் வட இந்திய கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த நாணயங்களில் காணப்படும் எழுத்துக்களை ஒத்திருப்பதால் இந்நாணயம் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த வட இந்திய மன்னர்களின் வெளியீடு என்று கருத வாய்ப்புள்ளது என்கிறார்.

6) மேற்கண்ட இக்கூற்றை கட்டுரைத் தொகுப்பு நூல் ஆசிரியரும் ஏற்றுக் கொள்கிறார்.

7) ஆனால் சவிதா சர்மா அவர்கள் மேற்கண்ட கருத்தை மறுக்கிறார். இவர் தாம் கொழும்பு அருங்காட்சியகத்தில் நாணயங்களை ஆய்வு செய்யும் பொழுது அனுராதாபுரத்தில் கிடைத்த புதைப்பொருள் நாணயங்களுடன் இத்தகைய சதுர வடிவம் மற்றும் சின்னங்கள் கொண்ட செப்பு நாணயங்கள் குறிப்பிடத்தக்க அளவில் தாம் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார். மேலும் இவைகள் ஈழ மன்னர்களின் வெளியீடு என்கிறார். அதே சமயத்தில், இந்நாணயங்கள் முந்தைய தமிழ்நாட்டு காசுகளை ஒத்துள்ளன என்றும் இவைகள் தமிழ் மன்னர்களின் காசுகளை முன் மாதிரியாக கொண்டு வெளியிடப்பட்ட நாணயங்களாகவும் இருக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கிறார்.

எனவே மேற்கண்ட ஒப்பீடுகளைக் கொண்டு பார்க்கையில் இவ்விரு நாணயங்களும்

1) புதைபொருளாக இதுவரை கிடைக்கப் பெறாததாலும்,

2) குறிப்பிடும் அளவில் இலங்கையில் கிடைத்துள்ளதாலும், தற்காலிக மாக இவைகள் இலங்கையைச் சார்ந்த கி.மு. முதலாம் நூற்றாண்டு செப்புக் காசுகளாகக் கருதலாம்.

மேலும் நமது பண்டைய தமிழக மன்னர்களின் நாணயங்களின் எடை, அவைகளில் காணப்படும் சின்னங்களின் தோற்றம், அமைப்பு நாணயங்களின் வடிவம் இவைகளைக் கொண்டு ஒப்பிடுகையில் இவ்விரு நாணயங்களும் நம் பண்டைய 'தமிழகக் காசுகளை முன் மாதிரியாகக் கொண்ட இலங்கைக் காசுகள்' என்றே தற்பொழுது கருத வாய்ப்பு மிகையாக உள்ளது.

அடிக்குறிப்புகள் :

1 & 2 : R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins,* 1997 pp. 42.113.

3 & 4 : Sir Walter Eliot, *Coins of South India,* 1975 PP 152

5 & 6 : *Numismatic Digest, Vol. V,* 1981 Part I, pp. 4 & 5

7 : *Numismatic Digest, Vol. VI,* 1982, Part I and II, pp. 10 & 11.

5

களப்பிரர் காசுகள்

க.ஆ. திருஞானசம்பந்தம்

மைசூர் சீமையான கர்நாடகத்தில் சரவண பெல்கோலா அருகில் உள்ள சந்திரகிரி மலையைத் களவாப்பு மலையெனப் பழங்கன்னடக் கல்வெட்டுக்கள் குறித்திடும்.

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் களப்பிரர் ஆவர். சமணசமயத்தைச் சார்ந்தவர்கள்; கலிதேவனை வணங்குவோர். இம்மக்களைக் 'கொடுங் கருநாடகர்' "எனத் தமிழ் இலக்கியம்" கூறும். இக்களப குடியில் தோன்றிய கலி அரசன் ஒருவனை பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் மூர்த்தி நாயனார் புராணத்தில்

"கானக் கடிசூழ் வடுகக் கருநாடர் காவல்
மானப் படை மன்னன் வலிந்து நிலம் கொள்வானாய்"

மதுரையம்பதியை வலிந்து பற்றி தன் அரசாட்சியை பாண்டிமண்டலத்தில் நிறுவினான் என்பர். மதுரையைத் தலை நகராகக் கொண்டு ஆண்ட இக்கலி அரசர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். மதுரையில் வாழ்ந்த சைவப் பெருமக்களுக்கு தொல்லை விளைவித்ததுடன், மதுரையில் நடைபெற்று வந்த அரண்பணியையும் தடுத்து வந்தனர்.

நந்தி மலைக்காவலின் : யாப்பருங்கல் விருத்தி உரைகாரர் தம் மேற்கோள் பாடலில், "கயில், புலி, வில் சின்னங்களைக் கொண்டு ஆட்சி செய்து வந்த களப்பிரனாகிய அச்சுதன் பூம்புகார் பகுதியில் சோழமண்டலத்தை ஆட்சி செய்ததோடு மூவேந்தரையும் வெற்றிபெற்று, அவர்தம் இலச்சினைகளையும் தம் கொடியில் பொறித்த செய்தியையும்" எடுத்தாண்டுள்ளார்.

கி.பி. 409 – 430ல் வாழ்ந்து வந்த புத்ததத்தரும், புத்தகோசரும் தாம் எழுதிய நூல்களில் களப்பிர மன்னன் அச்சுதன் பூம்புகாரில் ஆண்டு வந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வரசர்கள் "கோங்கமலர்" சின்னத்தை தம் அடையாள மாலையாகக் கொண்டவர்கள். சமணசமய கலிதேவன் வணக்கத்தை உ டையவர்கள். களப குலத்தினராகிய களப்பிரருக்கு "யானை" குலமரபுச் - சின்னமாகும். "களப" என்பது யானையைக் குறிக்கும். இக்களப்பிர அரசர்கள். கி.பி. 4ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 575வரை தமிழகத்தையும், தென்னாட்டையும் வலுவோடு ஆட்சி செய்தவர்கள்.

இக்களப்பிரமன்னர் ஆட்சியிலிருந்து தமிழகத்தை விடுவித்தவன்

கொங்கு நாணயவியல் ஆய்வு மையம், ஈரோடு – 3.

கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் என வேள்விக்குடி சாஸனம் (செப்பேடு) தெரிவிக்கும்.

விரியினார் கோங்கமும் – (யாப்பருங்கலம் பாடல் 15)

"கயலோடு கலந்த சிலையடைக் கொடுவரிப்
புயிலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
தொன்று முதிர் கடலுலகம் முழுதுடன்
ஒன்று திகிரி உருட்டுவோன் எனவே"

(யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் பாடல்)

தமிழகத்தை ஆண்டு வந்த களப்பிரர்களை பாண்டிய மன்னன் கடுங்கோன் கி.பி. 575ஆம் ஆண்டிலும் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் தொண்டை நாட்டு களஞ்சியம்பதியிலிருந்தும் (கி.பி. 630க்குப் பிறகு) தமிழகத்தை மீட்டனர்.

களப்பிரர் காசுகள் :

தமிழ் நாட்டின் வரலாற்றில் இருண்ட காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை என்பர் வரலாற்று அறிஞர்கள். போதுமான வரலாற்றுக் கருவூலங்கள் முன்பு கிடைக்காமல் போனதால் அவ்வாறு கூறினர் போலும்.

ஆனால் தற்போது கருவூர் அமராவதி ஆற்றங்கரையிலிருந்தும், மதுரை வைகை ஆற்றங்கரையிலிருந்தும். ஆயிரமாயிரம் பிற்கால ரோமாபுரியை ஆண்ட (கி.பி. 345–கி.பி. 600 வரை) 22க்கும் மேற்பட்ட ரோமபுரி மன்னர்களின் செம்பு, வெண்கலக் காசுகள் தமிழக ஆய்வாளர்களுக்கு மண் காசு எடுப்போரால் கிடைத்திருப்பது, சிந்தனைக்கு விருந்தாகும்!

அண்மையில் இக்கட்டுரை ஆசிரியருக்கு நான்கு காசுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் இரு காசுகள் பற்றிய குறிப்புகள்:

காசு எண் : 1

கிடைத்த இடம் : மதுரை வைகை ஆற்றுப்படுகை
உலோகம் : மாற்றுக்குறைந்த பொற்காசு
வடிவம் : வட்டம்; நிறை : 2 கிராம்.

முன்பக்கம் : பாயும் நிலையில் இடப்பக்கம் யானை; யானையின் முன்கால்பக்கம் : மீன்; யானையின் முதுகுப் பகுதி விளம்பில் வில், அம்பு; காசின் மேல் இடது விளிம்பில் புலி

பின்பக்கம் : களப்பிரரின் அடையாள மலர் "கோங்க மலர்"

மூவேந்தர்தம் சின்னங்களை பொற்காசில் பொறித்திருப்பதாலும் களப்பிரர் தம் குலமரபுச்சின்னம் யானை என்பதாலும் இக்காசு களப்பிரர் காசாக இருக்கலாம்!

காசு எண் : 2

கிடைத்த இடம் : கரூர் அமராவதி உலோகம் : டின் போட்டின்

வடிவம் : வட்டம் நிறை : 3.250 கிராம் சுற்றளவு : 1.5. செ.மீ.

முன்பக்கம் : இப்புறம் நோக்கி நிற்கும் வேட்டைச்சிவிங்கி. சிவிங்கி வாய் அருகே வில்; முன்பாதத்தின் கீழ் மான்; புறக்காலருகே பன்றி. வாய் அருகே : மீன்

பின்பக்கம் : தர்மச்சக்கரம்

களப்பிரர் புத்த சமயத்தையும் சேர்ந்தவராக இருத்தலின் தர்மசக்கரத்தை காசின் புறத்தே பொறித்துள்ளனர் போலும்.

தென்னாடு முழுமையும் ஒருகுடைக்கீழ் ஆண்டமையால் 5 அரசர் சின்னங்களை தம் நாணயத்தில் பொறித்துள்ளார்.

காசு–1



முன்புறம்



பின்புறம்

காசு – 2



முன்புறம்



பின்புறம்

A Note on Copper Weight With a Legend

*Sankaran Raman**



A copper weight weighing 3.84 gms. and round in shape has been recovered from the Vaigai river bed at Madurai.

The legend, an interesting one engraved on the weight, reads as `Kosar', Palaeographically it belongs to the 6th-7th centuries A.D.

The `Kosars' are referred to in the Sangam literature. They were the rulers of Tulunadu, with their capital at Mangalore. However, some scholars have identified them with the Satyaputas of Tagadur, of whom the Asokan rock edicts and Jambai inscription speak. The edicts of Asoka refers the Satyaputas as one of the ruling dynasties in South India whose domains were left unconquered by him.

Besides, the recently discovered Jambai inscription also mentions the name of Satyaputas, identifying them with the Satyaputra of Tagadur Neduman Anji family.

In due course, the Kosar clan in their quest for expansion spread their dominion from the Tulu region to the east and settled in the Kongan region. Hence, they were called the Kongilan-kosar in Silapadigaram.

* Honorary Treasurer, Madras Coin Society, Chennai (LM.40)
8/D1, Anand Apartment, 50 L.B. Road, Thiruvanmiyur, Chennai - 600 041.

முதல் இனம் காணலைப் பொறுத்தவரை நாணயங்களை பெரும்பாலும் அந்தந்த அரசக்குல சின்னங்களுடன், அவர்களது பெயர்களைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட வம்சத்திற்கும், அரசிற்கும் உரியதாக ஆய்வாளர்கள் எந்த ஆட்சியாளரைச் சார்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளனரோ அவைகள் அப்படியே பட்டியலிடப் பெற்றுள்ளன. (இடவசதி காரணமாக அட்டவணை இத்துடன் இணைக்கப்படவில்லை. வேண்டுவோர் கட்டுரை ஆசிரியரிடம் கேட்டு பெறலாம்) இந்த அட்டவணையானது; நோக்கீடு, அதனை வெளியிட்ட ஆட்சியாளர், நாணயத்தின் முன்பக்கம், பின்பக்கம், உலோகம், எடை, அளவு ஆட்சியாளர்களின் ஆட்சிகால வரிசையின் படியும் கொண்டு அமைந்துள்ளது. வம்சங்களின் பெயர்களை தலைப்பிலும். நாணயங்களை தொடர் எண்களாகவும் கொண்டு 237 நாணயங்கள் இதில் பட்டியலிடப் பெற்றுள்ளன. பட்டியலிடுவது இவ்வாய்வின் நோக்கமன்று. இனம் கண்டுள்ள நாணயங்களை ஆசிரியர்கள் அவ்வப்பொழுது நூல்களிலும், பருவ இதழ்களின் கட்டுரை களாகவும் வெளியிட்டு வருகின்றனர். மேலும் நாணயங்கள் தொடர்பான புதிய செய்திகளும் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் இருப்பதனால் சிதறல்களாக கிடைக்கும் இந்நாணயங்கள் கல்வெட்டு கூறும் பணப் பொருளாதாரத்திற்கு எந்த அளவிற்கு துணை நிற்கிறது என்பதை அறிய இந்நாணயங்களைப் பட்டியலிடுவது அவசியமாகிறது. பல ஆசிரியர்களது நூல்களில்

---

*முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வெட்டியல் துறை, த.ப.க. தஞ்சாவூர்.

நாணயங்களின் வகைப்பாடுகள் குறித்த முழு செய்திகளும் கிடைக்கப் பெறவில்லை. ஆதலால் வகைப்பாட்டிற்கு நாணயவியலாளரான திரு. ஆறுமுக சீதாராமன். திரு. சங்கரன் ராமன் ஆகியோரது சேகரிப்பில் இருந்த நாணயங்களில் பல்லவர். சோழர்களது நாணயங்கள் சில நேரிடையாகச் சென்று ஆராயப்பட்டது.

சின்னங்கள்

நாணயங்களை அடையாளம் காண்பதில் சின்னங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. தொன்மையான நூல்களில் இடம் பெற்றிருக்கும் சேர, சோழ, பாண்டிய அரசர்களின் நாணயங்களின் சின்னங்கள் அறியப்படாததால் அவை வேறு வம்சத்தினருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. கி.பி. 1984ஆம் ஆண்டு சங்ககால பாண்டியரது பெருவழுதி[1] என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட நாணயம் கிடைப்பது வரையில் சங்ககால சேர, பாண்டியரது சின்னங்கள் பற்றி நாணயவியலாளர்களுக்கிடையே தெளிவற்ற நிலையே நீடித்துள்ளது. அதுவும் சங்ககால பாண்டியரது நாணயங்களில் மீன் சின்னங்கள் கோடுகளால் வரையப்பட்டுள்ளதால். செங்கோண வரிவடிவின் கீழ் அரைவட்டம் இடம் பெற்றிருப்பது பாண்டியரது சின்னம் அல்ல என நாகசாமியும்[2] சட்டோ பாத்யாயாவும்[3] குறிப்பிட்டுள்ளனர். பாண்டியரது மீன் சின்னத்தை புத்த சக்கரம் என்றே குறிப்பிடும் பிடுல்ஃப் இது மீன் சின்னமாகவும் இருக்கலாம் என்றே குறிப்பிடுகின்றார்[4].

சங்ககால நாணயங்களில். அவர்களது குலச் சின்னங்களாக சேரரது நாணயங்களில் வில் அம்பும். சோழரது நாணயங்களில் வால் உயர்த்தி வாய் பிளந்து நிற்கும் புலியும். பாண்டியரது நாணயங்களில் மீனும் பொறிக்கப்பட்டு உள்ளன. அதுபோல். இடைக்காலத்தில் பல்லவரது நாணயங்களில் முன்பக்கம் திமிலுடன் காளை இடப்பக்கமோ அல்லது வலப்பக்கமோ நோக்கி நிற்கும். பின்பக்கம் 16 கதிர்கள் கொண்ட சக்கரம், சங்கு, மீன், பன்றி போன்ற பல சின்னங்கள் இடம் பெறுகின்றன.

சோழர்களின் நாணயங்களில் பல சின்னங்கள் இடம் பெறினும் சிலோனிய மனித உருவம் என்று அறியப்படும் உருவம் முன்பக்கம் நின்ற நிலையிலும், பின்பக்கம் அமர்ந்த நிலையிலும் இருக்கும் நாணயங்களே அதிக அளவில் கிடைக்கின்றன[5]. முதலாம் ராஜராஜனது நாணயங்கள் பெரும்பாலும் இவ்வகையினைச் சார்ந்ததே. வெண்கொற்றக் குடையின் கீழ் இருபுறமும் இருசாமாரங்கள். விளக்குகளுக்கு நடுவில் இடமிருந்து வலமாக, வில், அமர்ந்த நிலை புலி, செங்குத்தாக நிற்கும் மீன்கள் உள்ள சின்னங்கள் நாணயத்தின் இருபுறமும் இடம்பெறும் மற்றொரு வகை நாணயம் இராஜேந்திர சோழனுடையதாகக் கருதப்படுகிறது.

பாண்டியர்களது நாணயங்களுள் ஒரு வகையில் முன்பக்கம் வெண் கொற்றக் குடையின் கீழ் 2 விளக்குக் கம்பங்களின் நடுவே ஒரு மீனும் பின்பக்கம் வெண் கொற்றக் குடையின் கீழ் அந்தந்த அரசர்களின் பெயர்களும் இடம் பெறுகின்றன. மற்றொரு வகை நாணயத்தில் முன்புறம் நிறைநிலையிலோ அல்லது அமர்ந்த நிலையிலோ உள்ள உருவமும். பின்புறம் செங்கோலினால் பிரிக்கப்பட்ட இரு செங்குத்தான மீன்களின் கீழோ, பக்கங்களிலோ, எழுத்துப் பொறிப்புக்கள் இடம் பெறுகின்றன.

விஜய நகர நாணயங்களின் முன்பக்கம், அனுமார், கருடன், உமாமகேஸ்வரா, லெக்ஷ்மி நாராயணா, வெங்கடேஸ்வரா போன்ற கடவுளர்களின் உருவங்களும் பின்பக்கம் அரசர்களின் பெயர்களும் இடம் பெறுகின்றன. நாயக்கர்களில் மதுரை நாயக்க மன்னர்கள் விஸ்வநாதன், வீரப்பன் போன்றவர்களது சில நாணயங்களில் பாண்டியரது சின்னங்களே இடம் பெற்றுள்ளன. மற்ற நாணயங்களில் பலவிதச் சின்னங்கள் இடம் பெரினும் பெரும்பாலும் விஷ்ணுவின் அவதாரங்கள் நாணயங்களில் சித்தரிக்கப் பட்டுள்ளன. தஞ்சை நாயக்கர்களிலும் பலவித சின்னங்கள் இருப்பினும் விஜயராகவ நாயக்கரின் நாணயம் ஒன்றில் அவர் தன் உருவத்துடன் தன் மனைவியின் உருவத்தையும் பொறித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்திற்குப் பிறகு 13–ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே சேரர்களது குலச்சின்னமான வில் சோழர்களது நாணயங்களில் தொடர்ந்து இடம் பெறுகின்றது. வேணாட்டுச் சேரர்கள் என்று அழைக்கப்படும் சேரர்களது நாணயங்களில் வில் அம்பு சின்னங்கள் இடம் பெறவில்லை. அதற்கு பதில் கோடாரிச் சின்னமே காணப்படுகிறது ஹொய்சாளர்கள் நாணயங்களில் மூன்று வளைவுடன் கூடிய செவ்வகத்திற்குள் அங்குசம் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

எழுத்துக்கள்

பல்லவர்கள் தங்கள் நாணயங்களில் பல்லவக் கிரந்தம். தமிழ் கிரந்தம். தமிழ் எழுத்துக்களையும், சோழர்கள் பெரும்பாலும் நாகரி எழுத்தையும், ஒருசிலவனவற்றில் தமிழ், கிரந்தம் இவற்றையும் பயன்படுத்தி உள்ளனர். பாண்டியர்களும், ஹொய்சாளர்களும் தமிழையும், விஜயநகர அரசர்கள் கன்னடம், நாகரியையும், நாயக்கர்கள் பெரும்பாலும் தெலுங்கு எழுத்துக்களையும் நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர்.

இவற்றை நோக்குகையில் இடைக்காலத்தில் சிறந்த பேரரசாக விளங்கிய சோழ, விஜயநகர அரசுகள் இரண்டுமே நாகரி எழுத்துக்களையே பெரும்பாலும் பயன்படுத்தியிருப்பதற்கு அரசியல் பின்னணி காரணமாக இருக்கலாம்.

இவ்விதம் கிடைக்கும் நாணயங்களின் எழுத்து குறிப்புகளை படித்து அந்தந்த அரசர்களுக்கு உரித்தாக்குவதில் ஆசிரியர்களுக்குகிடையில் பல கருத்து வேறுபாடுகள் எழுந்து பின்பு கணித்துள்ளனர். சோழர்களது நாணயங்களில் மதுராந்தகன். 'உத்தமச் சோழன்', 'கடைகொண்ட', 'மலைநாடு கொண்ட' என்ற எழுத்துப் பொறிப்புள்ள நாணயங்களும், பாண்டியர்களது நாணயங்களில் 'அவனிப சேகரன் கோளக' என்ற எழுத்துப் பொறிப்புள்ள நாணயங்களும், 'சமரகோலாகலன்', 'புவனிகவீரன்' என்ற எழுத்து பொறிப்புள்ள நாணயங்களும், விவாதத்திற்குட்பட்டவையாக உள்ளன. ஆசிரியர்களின் விவாதத்திற்கு எடுத்துக்காட்டாக உத்தமச் சோழன் என்று நாகரி எழுத்தில் உள்ள நாணயத்தை சட்டோபாத்யாயா[6] உத்தம சோழனுடையதே என்றும், நீலகண்ட சாஸ்திரியும்[7] நடன. காசிநாதனும்[8] இராஜேந்திரனுடையது என்றும் கூறுகின்றனர். இந்த விவாதங்களில் அரசரது பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் போது அதை அந்தந்த அரசருக்கே உரித்தாக்குவது பொருத்தமாகும் என்று கருதுவதுடன் இதுபோன்ற விவாதங்கள் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட துவக்க காலங்களில் பயனுடையதாக இருந்திருப்பினும். இவ்வாறு சிதறலாக கிடைக்கும் ஓரிரண்டு நாணயங்களை ஒரு குறிப்பிட்ட சில ஆட்சியாளர்களுக்கு உரித்தாக்குவதால் பொருளாதாரத்தில் பெருமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, கல்வெட்டுக்கூறும் நாணயங்களை கண்டுபிடிப்பு நாணயங்களுடன் ஒப்புமைப்படுத்த மேற்குறிப்பிட்ட மற்ற செய்திகளைக் காட்டிலும் அவற்றின் எடை, உலோகம் பற்றி ஆய்வு அவசியமானது. தௌலேஸ்வரம் குவியல் போன்ற ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பாலான நாணயங்கள் சிதறல்களாகவே (Stray findings) கிடைப்பதால் இவற்றை ஆய்வதில் சிரமம் உள்ளது. எனவே, அருங்காட்சியகங்களிலும் தனி நாணயவியலாளர்களிடமும், தொகுப்பாக கிடைக்கும் நாணயங்களை ஆராய்ந்தால் இவை தொடர்பான செய்திகளை பெறக்கூடும் என்ற கருதுகோலின் அடிப்படையில் சோழர், விஜயநகர நாணயங்கள் எடை பற்றிய ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சோழர் நாணயங்களின் எடைகளுக்கு சென்னை அருங்காட்சியக சேகரிப்பிலுள்ள மூன்று குவியல்களில் மொத்தம் ஆயிரம் நாணயங்கள் எடையிடப்பட்டுள்ளன[9]. இவை அனைத்தும் முதலாம் ராஜராஜனின் பெயர் பொறிக்கப்பட்ட முன்புறம் நிற்கும் உருவமும். பின்புறம் அமர்ந்த உருவமும் கொண்ட நாணய வகையினைச் சேர்ந்ததாகும்.

ஆந்திர அருங்காட்சியகத்திலுள்ள விஜயநகரவம்ச நாணயங்களையும்.

சென்னை அருங்காட்சியகத்திலுள்ள நாணயங்களையும் முறையே, ரமேஷன்[10], சங்கர நாராயணன்[11] ஆகியோர் ஆய்வு செய்து பட்டியலிட்டுள்ளனர். இவர்களது பட்டியலிலிருந்து எடைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை அருங்காட்சியகத்தில் நேரிடையாக எடையிடப்பட்ட சோழர் நாணயங்கள் அனைத்தும் செப்பு உலோகத்தாலானவை. ஆதலால் பாலகிருஷ்ணனது தௌலேஷ்வர குவியல் என்ற நூலில் வெளியிடப்பட்ட தங்க நாணயங்களின் எடை அளவுகளும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நாணயங்கள் 78. இவற்றின் சராசரி எடை 4 கிராம்கள் (67 கிரெய்ன்கள்) ஆகும்[12].

செப்பு நாணயங்கள் 1000–இல் 7 நாணயங்கள் 2.77 – 2.93 கிராம் எடைகளிலும், 571 நாணயங்கள் 3.3–3.9 கிராம் எடைகளிலும், 3 நாணயங்கள் 5–5.5 கிராம் எடைகளிலும் கிடைக்கின்றன. எனவே சோழர்களது செப்பு நாணயங்களின் எடை அளவு சராசரியாக 3.5–4.9 கிராம்கள் ஆகும். தங்க நாணயங்கள் 4 கிராம்கள் ஆகும். இவையனைத்தும் வட்டவடிவம் கொண்டவை. இருவகை அளவுகளில் கிடைக்கின்றன. 1.5 செ.மீ. குறுக்களவில் தடிமனானதாக ஒரு வகையும், 2 – 2.5 செ.மீ குறுக்களவில் மெல்லியதான ஒரு வகையிலும் உள்ளன. எடையானது அளவைப் (Size) பொறுத்து வேறுபடவில்லை.

விஜயநகர நாணய எடைகள்

ஆந்திரப் பிரதேச அருங்காட்சியக நாணயப் பட்டியலில் 2134 நாணயங்களும், சென்னை அருங்காட்சியக நாணயப் பட்டியலில் 645 நாணயங்களும் ஆக 2779 நாணயங்களைக் கொண்டு நோக்குகையில் 1427 நாணயங்கள் 50–56 கிரெய்ன்கள் எடையிலும். 1176 நாணயங்கள் 25–26 கிரெய்ன்கள் எடையிலும். 176 நாணயங்கள் மற்ற எடைகளிலும் கிடைத்துள்ளன. 52 கிரெய்ன்கள் 3.5 கிராம்களாகும்[13]. ஆந்திராவில் கிடைத்த 2134 நாணயங்களில் 2030 நாணயங்கள் பொன்னாகவும், 104 நாணயங்கள், செம்பாகவும் உள்ளன. சென்னையில் கிடைத்த நாணயங்கள் 645–இல் 295 நாணயங்கள் பொன்னாகவும் 350 நாணயங்கள் செம்பாகவும் உள்ளன. தமிழகத்தில் செம்பாலான நாணயங்களே எண்ணிக்கையில் அதிகமாக கிடைக்கின்றன.

இடைக்காலத் தமிழகத்தின் எடை அளவுகள்

கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களின் எடை, அளவுகள் இவ்விதம் இருக்கையில் அவற்றைப் பற்றிய ஆசிரியர்களது கருத்துக்கள் மூலம்

அறியப்படுவது என்ன! இக்கால உலோக எடைமுறைகள் அனைத்தும் தானிய எடை அளவுகளிலிருந்து தோன்றியது என்பதை மனு, நாரஸ்மிருதி. பிரஹஸ்பதி போன்ற சட்ட நூல்கள் மூலம் அறியலாம். இதன்படி கிருஷ்ணலா அல்லது ரதி (radiatus) என்ற விதையே எடைகளுக்கு அடிப்படை அலகாக (unit) இருந்துள்ளது. இதன் சராசரி எடை 1.75 தானிய எடை என எட்வாட் தாமஸ் வலியுறுத்தியுள்ளார்[14]. மனுவில் ரதி, மாஷகா, தாரணா, புராணா, ஸதமானா, ஸ்வர்ணா, பலா, நிஷ்கா, கார்ஷாபணா போன்ற எடை அளவுகள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் உலோகத்திற்கு ஏற்ப எடை அளவுகளையும், அவற்றின் பெயர்களையும் மாற்றியிருப்பது குழப்பம் தருவதாக உள்ளது. காட்டாக தங்கத்திற்கு நிஷ்கா, ஸ்வர்ணா என்றும் வெள்ளிக்கு தாரணா. புராணா என்றும் செம்பிற்கு கார்ஷாபணா என்றும் பெயர் வழங்கி உள்ளனர். இவை உலோகங்களின் பெயர்களாகும். தாரணா, புராணா ஸ்வர்ணா நிஷ்கா, கார்ஷாபணா போன்ற எடை அளவுகளும் உள்ளன. வெள்ளியாயின் 32 ரதி 1 தாரணா என்றும் அதே தங்கமானால் 3200 ரதி 1 தாரணா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாரணா என்பது 56 தானியங்கள் எடை கொண்ட பொதுவான எடை அளவானால் அது உலோகத்தை பொறுத்து மாறுவதன் காரணம் அறியுப்படவில்லை. மனுவைத் தொடர்ந்து வந்த நாரதஸ்மிருதியில் கார்ஷாபணா என்பது வெள்ளியையும். பிரகஸ்பதியில் செம்பையும் குறித்துள்ளது[15]. இது நமது ஆய்விற்கு நேரிடையாகப் பயனுடையது அல்ல எனினும். துவக்க நிலையிலேயே எடை அளவுகளை கொண்டு உலோகத்தை வேறுபடுத்துவதில் சிக்கல் உள்ளது என்பதை சுட்டுவது அவசியமாகிறது.

இடைக்காலத் தென்னிந்திய எடை முறைகள் குறித்துப் பார்க்கையில் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த லீலாவதி என்ற நூலும், காலம் அறியப்படாத மலையாள கணக்குச் சாரமுமே ஆதாரங்களாக உள்ளன. இவை கொண்டு கேரளாவில் நெல், விசதூக்கம், கோணி அல்லது ரதி, மஞ்சாடி பணதூக்கம், கழஞ்சு எடை அளவுகள் இருந்ததை அறியமுடிகிறது. இப்பகுதியின் அங்காடி எடைகளும் அட்டவணையிடப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் குன்றி அல்லது ரதியை அடிப்படையாகக் கொண்டே எடை அளவுகள் அமைந்துள்ளன. அதன் உயர் எடை அளவுகளின் பெயர்கள் வேறுபடுகின்றன. தமிழ் நாட்டிலும் குன்றி, மஞ்சாடி, கழஞ்சு போன்றவை உலோகங்களை நிறுக்கும் சிறு அளவாக இருந்துள்ளன. இவை கல்வெட்டுக் களிலும் இடம் பெறுகின்றன. தமிழகத்தில் பணம் அல்லது பணதூக்கம், வராகனெடை அல்லது பகோடா எடை, பலம், வீசை, மாடை, கண்டி, தூக்கம், எடை, துலாம், பொதி அல்லது எருதி பொதி என்பவைகள் அங்காடி எடைகளாகவும், குன்றி, மஞ்சாடி, பணதூக்கம், வராகன் அல்லது பகோடா

எடை, கழஞ்சு, ரூபாய் எடை போன்றவை பொற்கொல்லர் எடைகளாகவும் குறிப்பிடுகின்றனர்[16]. ஆனால் இவை பிந்தைய காலக் கட்டத்தைச் சார்ந்தவையாகும். இடைக்காலத்தில் இருந்த சிலச் சொற்கள் பின்பும் தொடர்ந்து இருந்து வந்துள்ளன. எனவே கல்வெட்டுக்களில் இடம்பெறும் நாணயங்களின் எடையினை அறிய குன்றி, மஞ்சாடி, கழஞ்சு இவற்றின் எடைகளை அறிவது அவசியமாகும்.

இடைக்காலக் கல்வெட்டுக்களில் 2 குன்றி 1 மஞ்சாடி. 20 மஞ்சாடி 1 கழஞ்சு என்ற எடை அளவுகள் மட்டுமே பரவலாக இடம் பெறுகின்றன. ஆனால் குன்றி என்பது என்ன விதை இதன் எடை என்ன போன்ற விவரங்கள் கல்வெட்டுக்களில் இல்லை. எடை பற்றி எழுதும் ஆசிரியர்கள் இவற்றின் எடைகளை தானிய எடைகளிலேயே குறிப்பிடுகின்றனர். இந்த தானிய விதைகள் அளவிலும், எடையிலும் வேறுபடுவதால் இவற்றை கொண்டு கணிக்கப்படும் மஞ்சாடி, கழங்சுவிலும் வேறுபாடு தோன்றுகிறது.

குன்றியும் ரதியும் ஒன்று என்றே கூறும் ஆசிரியர்கள் 1 ரதிக்கு அல்லது குன்றிக்கு சமமாக 1.75 கிரெய்ன்களை (grams) கூறுகின்றனர் அவ்வாறாயின் 2 ரதி 1 மஞ்சாடி எனில் 20 மஞ்சாடிக்கு (1 கழஞ்சு) 70 கிரெய்ன்கள் சமமாகிறது. எனவே ஒரு கழஞ்சுவிற்கு 3.325 கிராம்கள் வருகின்றது. ஆனால் இவர்கள் கூறும் ரதி ஃபஸிலஸ் ரேடியேடஸ் (Phaselous radiatus). ஃபஸிலஸ் வல்கரிஸ் (Phaselous Vulgeris) என்ற இரு விதைகளையும் குறிக்கிறது. ஃபஸிலஸ் வல்கரிஸ் (Phaselous Vulgeris) 2 குன்றியும் 3.5 கிரெய்னும். ஃபஸிலஸ் ரேடியேடஸ் (Phaselous radiatus). என்பது 2 குன்றிக்கு 5 அல்லது 6 கிரெய்னும் எடை உடையது. ஒரே விதையே இவ்விதம் வேறுபட்ட எடைகளை கொண்டிருப்பதுடன் தானிய விதைகளும் வேறுபட்டிருப்பதால் இவற்றின் சராசரி எடை அளவுகளில் வேறுபாடு தோன்றுகின்றது. இதனால் கழஞ்சு எடையினை தோராயமாக 50–60 கிரெய்ன்களிலிருந்து. 60–70 கிரெய்ன்கள் எடை வரையிலும் ஆசிரியர்கள் கணிக்கின்றனர்.

அடேணன்தரா பவோனினா (Ademanthora Pavonina) என்பது மஞ்சாடி விதையாகவும், அப்ரஸ்ப்ரிகடேரியஸ் (Abrus Pricateries) என்பது குன்றியாகவும் கணக்கு சாரம் குறிப்பிடுகின்றது. இதன் தாவரவியல் பெயர்கள் (Botanical name) நேரிடையாக கேட்டும் சரிபார்க்கப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு இடைக்கால கத்யானா அல்லது கழஞ்சுவின் சராசரி எடை 58 கிரெய்ன்கள் என்றும் அதிக எடை 60.1 என்றும் கனமான காத்யானா அல்லது கிரெய்ன்கள் எடை அளவு உள்ளதாக காட்ரிங்டன் குறிப்பிடுகின்றார்[17]. மலையாள கணக்கு சாரநோக்கீட்டிலும் 18 மஞ்சாடி கொண்ட பகோடாவின் எடை 54 கிரெய்ன்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது[18].

இதை 20 மஞ்சாடிக்கு கொண்டால் 60 கிரெய்ன்கள் வருகின்றது. திருநெல்வேலி எடை அளவாக வால்டர் குறிப்பிடுவதிலும், 60–70 கிரெய்ன்கள் ஒரு கழஞ்சு எடைக்குச் சமமாக குறிப்பிடுகின்றார்[19]. எனவே ஏறத்தாழ 60 கிரெய்ன்கள் என்பதை ஒரு கழஞ்சுவிற்குச் சமமான எடையாகக் கருதலாம்.

அண்மையில் சோழர்கால எடைக்கல் ஒன்று நாணய சேகரிப்பாளர் ஆறுமுக சீதாராமன் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது[20]. இதன் எடை 19 கிராம்களாகும். இதில் தமிழ் எண்ணில் 5(ரு) என்றும் கழஞ்சு (U) குறியீட்டிலும் இடப் பெற்றுள்ளது. ஆகவே இது 5 கழஞ்சு எடையுள்ள கல்லாக கருதப்படுகிறது. இதன்படி 1 கழஞ்சுவிற்கு 3.8 கிராம்கள் வருகிறது. இதை தோராயமாக 4 கிராம்கள் (60 கிரெய்ன்கள்) எனக் கொள்ளலாம். எனவே 1 கழஞ்சுவின் எடை வேறு எந்த தடையங்கலும் கிடைக்காத வரையில் 4 கிராம்கள் எனக் கொள்ளலாம்.

இன்று பெரும்பாலான வழக்கில் குன்றி என்று கருதப்பட்டு வரும் கருப்பு சிவப்பு விதையின் தாவரவியல் பெயர் அப்ரஸ் பிரிகேடேரியஸ் (Abrus precateorieas). மஞ்சாடியின் பெயர் அடேனன்தரா பவோனினா (Adenanthera pavanena) என்பதாகும். இக்குன்றியை நேரிடையாகச் சென்று எடையிட்டதில் 20–24 விதைகளே ஏறத்தாழ 4 கிராம் எடைகளுக்குச் சமமானதாக வருகிறது[21]. இதுவே கல்வெட்டுக் கூறும் குன்றியாயின் 40 குன்றிகள் 1 கழஞ்சுவிற்குச் சமமானதாக வரவேண்டும். ஆனால் இவ்விதையை மஞ்சாடி என்றே தங்கள் வட்டாரங்களில் (நாகர்கோயில்) (இலங்கை) அழைப்பதாக பலர் உரைக்கின்றனர்.

கல்வெட்டுக்களில் உள்ள நாணயப் பெயர்களோடு கண்டு பிடிப்பு நாணயங்களை இனம் காணல்

கல்வெட்டுக்களில் இயல் ஒன்றில் குறித்துள்ளபடி அக்கம், காசு, பணம், பொன், வராகன், குளிகை, மாடை இதுபோன்று இன்னும் பலப் பெயர்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் பொன், வராகன், குளிகை, மாடை அக்கம் இவைகள் பொன் உலோகத்தால் ஆனவை என்றும் காசு, பணம் இவை செம்பாலானவை என்றும் நாணயவியலாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கிடையே பரவலான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் கல்வெட்டுக்களில் நாணயங்கள் எந்த உலோகத்தால் செய்யப்பட்டுள்ளது என்பவை கொடுக்கப்படவில்லை. சில நேரங்களில் பொற்காசு என்ற தொடர்கள் இடம் பெறுகின்றன. மற்றபடி வெள்ளிக்காசு செம்புகாசு போன்றவை கிடைக்கவில்லை. சக்ரவர்த்தி தென்னிந்தியாவில் காசு சிறிய செம்பு நாணய வகையாக செலாவணியில் இருந்துள்ளது. ஆனால் இது பொதுவாக செல்வத்தையும் நாணயத்தையும்

குறிக்கவும் பயன்பட்டுள்ளது. பொற்காசு, வெள்ளிக்காசு, செம்பு காசுகள் முறையே தங்ககாசு வெள்ளகாசு, செம்பகாசு என்று அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிடகின்றார்[22]. இதன் காலகட்டம் குறிப்பிடவில்லை. எனினும் இவரது நூலின் ஆய்வு காலக்கட்டமே. கி.பி. 3–ஆம் நூற்றாண்டு வரையில் மட்டுமே என்பதாலும் காசு என்பது கார்ஷா என்ற தொடரிலிருந்து தருவிக்கப்பட்டது என்பதுடன் இதன் எடை 80 ரத்திகள். 140 அல்லது 146 கிரெய்ன்கள் எடை உடையவை என்றும் கூறுகின்றார். இந்த எடை அளவுகள் தமிழக நாணய எடை அளவுகளுக்கு ஏற்புடையதன்று, கிடைக்கும் நாணயங்கள் எவற்றிலும் அவற்றின் பெயர்கள் பொறிக்கப்படவில்லை.

அக - (அக்கம்?)

அக என்று நாகரியில் எழுத்துப் பொறிக்கப்பட்ட பொன் நாணயத்தை அக்கம் என்று மாலினிடையஸ் போன்ற இலங்கை ஆசிரியர்கள் கருதுகின்றனர்[23]. சாந்தலிங்கம் இதிலுள்ள எழுத்தை உரக என்று படித்து அதை முதலாம் ராஜராஜனுக்கு உரித்தாக்கி உள்ளார்[24]. உரக என்ற சொல்லை உரகர்கள் நாகர்களுடன் தொடர்புபடுத்தி முதலாம் பராந்தகன் வட இலங்கையை கைப்பற்றி உரகர்களை ஆண்டதாக கூறி அப்பொழுது வெளியிட்ட நாணயம் என்று புஷ்பரட்ணம் அவர்கள் குறிப்பிடுகின்றார்[25]. நேரிடையாக பார்வையிட்ட இந்நாணயத்தில் अक என்ற இரு எழுத்துக்களே இடம் பெறுகின்றது.

வராஹ

வராஹ என்று நாகரி எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள நாணயம் ஒன்று நாணயவியலாளர் ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பில் உள்ளது. இவர் இந்நாணயத்தை மதுரை நாயக்கர் முதலாம் கிருஷ்ணப்பருக்க உரித்தாக்கி உள்ளார். இதன் எடை 2.1 கிராம். இது செப்பு உலோகத்தால் ஆனது.

குளிகை

அவனிப்ப சேகரன் கோளக என்ற எழுத்துப் பொறிப்புள்ள நாணயத்திலுள்ள கோளக என்ற எழுத்துக்களை நாகசாமி குளிகை என்று படித்துள்ளார் [26]. இதன் எடை அறியபடவில்லை. உலோகம் செம்பாலானது.

கண்ட கோபாலன் மாடை

கண்ட என்ற தமிழ் எழுத்து முன்புறமும், குழல் ஊதும் கோபாலன் உருவம் பின்புறமும் உள்ள நாணயத்தை நடன காசிநாதன் கண்ட கோபாலன் மாடை என்று இனம் கண்டுள்ளார். இந்நாணயம் பொன்னாலானது, எடை அறியப்பட வில்லை. ஆனால் நாணயத்தில் மாடை என்ற எழுத்துப் பொறிப்புகள் ஏதும்

இல்லை[27].

நடன காசிநாதனின் கருத்து ஏற்கபடுமாயின் வராஹ என்று எழுதப்பட்டுள்ள நாணயங்களில் பன்றி உருவம் இடம் பெற்றிருக்க வேண்டும் அவ்வாறு இடம் பெறவில்லை. விஜய நகர நாணயங்களில் திருமலராயரது ஒருசில நாணயங்கள் தவிர பெரும்பாலானவற்றில் பன்றி சின்னம் இல்லை. ஆசிரியர்களால் வராஹம் என்று அடையாளம் காட்டப்படும் 52 கிரெய்ன்கள் (3.5 கிராம்) எடையுள்ள நாணயங்களில் கூட இச்சின்னம் இடம் பெறவில்லை. எனவே சின்னங்கள் கொண்டு நாணயங்களை அடையாளம் கொண்டால் பன்றி உருவம் இல்லாத நாணயங்களை வராஹனாக ஏற்க இயலாது. எழுத்துப் பொறிப்புக் கொண்டு நோக்கினால் வராஹன் என்ற எழுத்து உள்ள ஒரு நாணயம் செப்பு உலோகத்தில் இருப்பது கொண்டு வராகன் என்பது செப்பு என்ற முடிவும் எடுக்க இயலவில்லை.

அதுபோல் விஜய நகர நாணயங்களின் உலோகம். எடை பற்றி கூறும் ஆசிரியர்கள் 52 கிரெய்ன்கள் அதாவது 3.5 கிராம் எடை உள்ளவை வராஹா அல்லது பகோடா நாணயங்கள் என்றும் 1/2 வராஹன் அல்லது 26 கிரெய்ன்கள் (1.75 கிராம்) எடை உள்ளவை பிரதாப் அல்லது மாடை நாணயங்கள் என்றும் காடி என்ற வகை நாணயம் 1/4 பகோடாவிற்குச் சமமானது என்றும் குறிப்பிடுகின்றனர்.

தமிழகக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் பொன்னும், மாடையும் சமமானதாகவே தோன்றுகிறது (இயல் – 2). வராஹன் கஜ்ஜானம் என்பது ஏறத்தாழ 2 கழஞ்சு பொன்னிற்கு சமமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் நமது 1 கழஞ்சு பொன் நாணயங்களின் எடை ஏறத்தாழ 4 கிராம்கள் இருக்கின்றன. இவர்கள் கூறும் வராஹன் நாணயத்தின் எடையே 3.5 கிராம்கள் தான் உள்ளது. இதிலும் பாதி எடை உடையனவற்றை (1.75 கிராம்கள்) மாடையாக கருத இயலாது.

மேலும் தார் என்பவை வெள்ளி நாணயங்கள் ஜிடல், காசு, பணா போன்றவை செப்பு நாணயங்களை குறிப்பிடும் இவர் பிரதாப் நாணய வகையை பிரதாப என்ற எழுத்துப் பொறிப்புடன் தொடர்புபடுத்தி அடையாளப்படுத்து கின்றனர்[28]. பிரதாப நாணயங்கள் ½ வராஹன் எடையுடைவை என்று குறிப்பிடும் இவர் கொடுத்திருக்கும் பட்டியலிலேயே ஸ்ரீபிரதாப ஹரிஹரா என்ற பெயர் பொறிப்புள்ள இரண்டாம் ஹரிஹரனின் நாணயங்கள் மட்டுமே அவ்விதம் 26 கிரெய்ன்களில் உள்ளன[29]. இவரைத் தொடர்ந்து ஆட்சி செய்த மன்னர்கள் அனைவருமே தனது பெயருக்கு முன் ஸ்ரீ பிரதாப என்ற விருதுப் பெயரை பயன்படுத்தி உள்ளனர். ஆனால் அவர்களது நாணயங்கள் 26

கிரெய்ன்களில் கிடைப்பதைவிட அதிக எண்ணிக்கையில் 56 கிரெய்ன்களில் உள்ளன[30]. பிரதாப என்ற பட்டத்துடன் பிரதாப் நாணய வகையை அடையாளப் படுத்துவது ஏற்புடையது அல்ல.

கல்வெட்டுக்களில் ராஜராஜன் காசு[31], ராஜேந்திரன் காசு [32] போன்ற காசு வகைகள் இடம் பெறுகின்றன. கண்டுபிடிப்பு நாணயங்களிலும் இவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டு நாணயங்கள் கிடைப்பதால் இந்நாணயங்களை ராஜராஜன் காசு, ராஜேந்திரன் காசு என்று கருதுவது பொருத்தமாகும். அவ்விதமே அரசர்களது பெயர்கள் இருக்கும் நாணயங்களை அவரவரது நாணயமாக கருதுவது சிறந்தது. காட்டாக உத்தமச் சோள என்றே பொறிக்கப்பட்ட நாணயத்தை உத்தமச் சோழனுடையதாகவே கருதலாம். அதை மற்ற அரசர்க்கு உரிதாக்குவதற்காக செய்யப்படும் சர்ச்சை தொடர்ந்து கொண்டே செல்வதினால் நாணயவியலின் வளர்ச்சி பாதிக்கக்கூடும். அதுபோல் முன்பே குறிப்பிட்டபடி, குளிகை, வராஹன், இவற்றை பொன் நாணயங்கள் என்றும் காசு, பணம் என்பவற்றை செப்பு நாணயங்கள் என்றும் குறைந்த ஆதாரங்களை கொண்டு முடிவு செய்ய இயலாது. இன்றைய சூழலில் நாணயவியலானது கிடைத்த ஒருசில நாணயங்களை கொண்டு, அதை குறித்த ஆட்சியாளருக்கு உரிதாக்குவதிலேயே நோக்காக உள்ளது. இதனால் தனக்கென ஒரு கருதுகோலை உருவாக்கி அதற்கேற்றார் போல் சான்றுகளை பயன்படுத்துகின்றனர். சில ஆசிரியர்கள் நாணயவியல் சான்றுகளை மட்டுமே கொண்டு தனது முடிவுகளை கூறுவதால் அவை கல்வெட்டுக்களோடு தொடர்புபடுத்த இயலாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி உள்ளன.

மேற்கூறப்பட்ட அனைத்துக் கருத்துக்களையும் கொண்டு நோக்குகையில் 4 கிராம் எடையுள்ளன. தங்க உலோகத்தாலான நாணயங்களை மாடையாகவோ, 1 கழஞ்சு பொன்னாகவோ. வராஹனாகவோ கூறலாம். கல்வெட்டுச் சான்றுகளின்படியே 2 காசு 1 கழஞ்சு என்ற கணிப்பின்படி ஏறத்தாழ 2 கிராம் எடை உள்ளனவற்றை பொற்காசாக் கருதலாம். 12 அக்கம் 1 காசிற்கு ஈடாக கல்வெட்டுக்களில் வருவதால் ஏறத்தாழ .3 எடையுடைய அ ஹ என்ற எழுத்துப் பொறிப்புள்ள நாணயங்களை அக்கம் என்று கருதலாம், ஏறத்தாழ இதே எடையிலோ, அல்லது .4; .5 வரை கிடைக்கும் நாணயங்களை பணம் என்று கருதலாம். இவையின்றி பொதுவாக செப்பு உலோகத்தில் கிடைக்கும் நாணயங்களை காசு என்றே கருதலாம் என இவ்வியல் வலியுறுத்துகிறது.

அக்கசாலைகள்

வரலாற்றுக் காலத்தின் துவக்கமான சங்க காலம் முதலாகவே

தமிழகத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்களை அச்சிட்ட நாணயச் சாலைகள் பற்றி அறிவது அவசியமாகும். தமிழக நாணய வரலாற்றின் துவக்கமான முத்திரை நாணயங்கள் வட இந்திய தொழில் நுட்பத்தை பின்பற்றியிருப்பதால் அவை வட இந்தியாவில் தயாரிக்கப்பட்டே இங்கு புழங்கியுள்ளது என்று பொதுவாக கருதுகின்றனர். ஆனால் தமிழக நாணயங்கள் வட இந்திய நாணயத்திலிருந்து வேறுபட்டு பின்புறம் அந்தந்த அரசுச் சின்னங்களுடன் காணப்படுவது தமிழக அரசுகளால் வெளியிடப் பட்டிருப்பதற்குச் சான்றாக அமைகிறது. அகழாய்வின் போது காஞ்சிபுரத்தில் கிடைத்த முத்திரை நாணயங்கள் செய்யப் பயன்படுத்திய அச்சுவார்ப்பும், பல்லவர் நாணய அச்சு வார்ப்பும் இச்சான்றை உறுதி செய்கின்றன[33]. இதைத் தொடர்ந்து எந்த வம்ச நாணய அச்சுக்களும் இது நாள் வரையில் கிடைக்கவில்லை. எனவே இது தொடர்பான பிற விவரங்களை கல்வெட்டுக்கள், இலக்கியங்களின் துணை கொண்டே அறிய வேண்டியுள்ளது.

இவ்விதம் நோக்குகையில் 'அக்கசாலை', என்ற தொடர் நாணயங்கள் தயாரிக்கும் இடத்தைக் குறிப்பதாக அகராதி சுட்டுகின்றது[34]. ஆயினும் இது பிந்தைய காலக்கட்டத்தைச் சேர்ந்தது. சிலப்பதிகாரத்தில் இச்சொல் பொதுவாக உலோக வேலைச் செய்யும் இடத்தை குறிக்கின்றது [35]. முந்தைய கி.பி. 10ஆம் நூற்றாண்டு கல்வெட்டுக்களிலும் இச்சொல் இடம் பெற்றுள்ளது[36]. விஜய நகர அரசு காலத்தில் இடங்கசாலை என்ற சொல் நாணயச் சாலையைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது[37]. அதுபோல் ஹொய்சள மன்னன் வீரராமநாதனின் ஸ்ரீரங்கம் கல்வெட்டில் கம்மட்ட என்ற சொல்லும் நாணயச் சாலையைக் குறிப்பதாக உள்ளது[38].

அக்கசாலை என்ற தொடர் இடம் பெறும் கல்வெட்டுச் சூழலை நோக்குகையில் இவை பெரும்பாலும் அக்கசாலை ஈஸ்வரமுடையார் கோயிலிற்கு தானம் கொடுக்கப்பட்டதையே குறிப்பிடுகின்றது. அக்கச் சாலைகளின் பணிகளையோ அதில் பணிசெய்தோர் பற்றிய குறிப்புக்களோ கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. ஆனால் இச்சொல் இடம்பெறும் கல்வெட்டுக்கள் பலவற்றிலும் கம்மாளர். முதலியார், பதிணென் விசையம், அறுவகை தொழில், நால்வகை ரதகாரர் போன்ற கொல்லர் வணிகத்ததார்களே தொடர்பு கொண்டுள்ளனர்[39]. குறிப்பாக உலோக வேலைச் செய்யும் இச்சாலைகளில் நாணயமும் அச்சடிக்கப்பட்டதற்கான நேரடியான கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கவில்லை.

இடைக்காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த இரு கல்வெட்டுக்கள் நாணய அச்சடிப்புடன் சிறிது தொடர்புடையனவாக கிடைக்கின்றன. தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் கி.பி. 1558–ஆம் ஆண்டைச் சேர்ந்த சதாசிவராயரின்

கல்வெட்டொன்று இடங்கசாலை ஏற்படுத்தி அதை வெங்கடாத்திரியின் மகனும், மஹா மண்டலேஸ்வரருமான தேவமஹாராயரிடம் நிர்வகிக்கக்கோரி அவருக்கு பிரதிநிதியாக சந்தமரசய்யன் என்பவரை நியமித்ததைப் பற்றிக் கூறுகின்றது[40]. கல்வெட்டு பாடப்பொருள் இணைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் 13–ஆம் வரியில் இடங்கசாலை பூறுவத்திலே சன்னத்திலே நடந்த கட்டளை என்று உள்ளது. 25–ஆவது வரியில் கட்டளையிட்டப்படி அழகிய திருவையாறனால் நாயனாற்கு என்று ஆரம்பிக்கப்பட்டு வரி 40–41இல் ஆக ஆறு பொன்னுக்கு பணம் 3½யே 4மா ஆக கட்டளை பண்ணின பாடியாலே என்று கல்வெட்டு வாசகம் முடிகிறது. இதைக் கொண்டு நூறு பொன் அச்சடிப்பதற்கு 3 ½யே 4மா பணம் அச்சடிப்புத் தொகையாக கணிக்கப்பட்டு உள்ளது[41].

ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் வாலி கண்டபுரம் கல்வெட்டில் கருவூலத்தில் (Treasury) நாணயம் அச்சடிக்கப்பட்டிருப்பது போன்ற செய்தி இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் இடம்பெற்றுள்ளது[42] (பின் இணைக்கப்பட்டுள்ளது). ஆனால் கல்வெட்டின் முழுப் பாடத்தை நோக்கு கையில்[43] இக்கல்வெட்டு அவ்வூர் நாட்டவர் வசூலிக்கும் கடமைகள் பற்றி கூறுகையில்

இப்படி கடமை இருக்கும் அளவில் கருவூகலத்து
அடிக்கும் பணம் முதற் பணமாக இடக்கடவதாகவும்

என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது.

இராஜராஜனின் 15–ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த வல்லம் கல்வெட்டில் வல்லம் (தஞ்சைமாவட்டம்) கருவூகல வல்லம் என்றே குறிப்பிடப்பெற்று உள்ளது[44]. ஆனால் இதிலுள்ள கருவூகலம் என்பது பண்டாரம் போன்று பொக்கிஷ அறை (Treasury) என்றே பொருள் கொள்ளப்படுகிறது. வாலிகண்டபுரம் கல்வெட்டில் வரும் கருவூகலத்தில் அடிக்கும் என்ற வாசகத்தை நாணயம் அச்சடிக்கும் என்ற பொருளிலேயே ஆசிரியர்கள் கருதுகின்றனர்[45]. சேகரிக்கப்படும் கடமைகளை அதாவது வரிமூலம் பெறப்படும் பணத்தை கருவூலத்தில் முதலில் அடைக்கப்படுவதை (செலுத்தப்படுவதை) முதற்பணமாக கருதியிருக்கவும் வாய்ப்புள்ளது. இதன் உண்மை கல்வெட்டுப் பாடப் பொருளின் கையெழுத்துப் பிரதியில் கருவூகலம் என்றே எழுதப்பட்டுள்ளது. அதுபோல் அடைக்கும் என்பது கூட அடிக்கும் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கலாம். கருவூக்கலத்தை நாணய சாலையாக கருதினால் இதேப் பொருளில் வரும் பண்டாரத்தையும் அவ்வாறே கருத இடமுண்டு. ஆனால் பண்டாரத்தில் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டதாக நோக்கீடுகள் கிடைக்கவில்லை.

நாணயச் சாலையைப் பொறுத்தவரை அக்கசாலை, கம்மாட்டா, இடங்கசாலை என்ற மூன்று தொடர்களும், நாணயச்சாலையைக் குறிக்கப் பயன்பட்டுள்ளன. தமிழகத்தில் அக்கசாலை பற்றிய முதல்குறிப்பு கி.பி. 9–10–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கொடும்பாளூரில் இருக்கும் வேளிர்களது கல்வெட்டுக்களிலேயே கிடைக்கின்றது. இச்சொற்கள் இடம்பெறும் கல்வெட்டுக்கள் இருக்கும் ஊர்களான சேலம், கொற்கை, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, நாகப்பட்டினம், வாலிகண்டபுரம் எவற்றிலும் நாணய அச்சுகள் கிடைக்கவில்லை. இலங்கையிலும் இது நாள் வரை கிடைக்கவில்லை. வேர்ச் சொற்களை ஆராய்கையில் அக்கம், கமட்டா என்ற இரு சொற்களுமே தமிழுக்கு உரியவை அல்ல. அக்கம் என்ற சொல் வடமொழிச் சொல்லான அக்ஷா என்பதிலிருந்தும், கமட்டா என்பது கன்னடச் சொல்லிலிருந்தும் தருவிக்கப்பட்டவையாகும்.

அக்கசாலை தொடர்பாக கர்நாடகத்தில் கிடைக்கும் ஆதாரங்கள். தமிழகத்தில் கிடைப்பதைவிட தெளிவும், விரிவான விவரங்கள் மிக்கதாகவும் உள்ளன. எனவே இடைக்காலத்தில் கர்நாடக நாணயச் சாலைகள் குறித்து P.B. தேசாய் குறிப்பிட்டிருப்பது இங்குச் சுட்டத்தக்கது(46).

எனவே தமிழகக் கல்வெட்டுக்களில் இவ்விதம் விவரமான செய்திகள் கிடைக்கவில்லை எனினும் நமது கல்வெட்டுக்களில் அக்கசாலை இடம்பெறும் சூழலுடன் கர்நாடக கல்வெட்டுக்களைத் தொடர்புபடுத்தி காண்கையில், தமிழகத்திலும் நாணயங்களை அச்சிட்டுள்ளனர். பெரும்பாலும் உலோக வேலைகளைச் செய்யும் கண்மாளர்களே நாணயங்களையும் அச்சடித்திருக்கக் கூடும். இவர்களுக்கு வணிகக் குழுக்களோடு தொடர்பு இருந்துள்ளது. விஜய நகர காலத்தில் நாணயங்கள் ஒரு நல்ல நிலையில் இருந்துள்ளன. பெரும்பாலான நாணயங்கள் ஒரே மாதிரியான எடை அளவுகளில் அச்சிடப் பெற்றுள்ளன. அச்சுப் பன்னாய, அதிஸ்சாயக் என்று அழைக்கப்பட்ட அரசனது அதிகாரி வரி நிர்ணயிப்பதல்லாமல் நாணயச் சாலையையும் நிர்வகித்துள்ளார். ஹம்பி போன்ற இடங்களில் நாணயச் சாலைகள் இருந்துள்ளன(47). சோழர்களுக்கு பின்பு தமிழகத்தை ஆண்ட தமிழ் மன்னர்களான பாண்டியர்கள் போன்றோர் தமிழ் எழுத்துப் பொறிப்புக்களை நாணயங்களில் பயன்படுத்தி உள்ளதால் இவர்கள் தங்களுக்கென தனிப்பட்ட முறையில் தமிழகத்திலேயே நாணயங்களை அச்சிட்டுள்ளதாகக் கருதலாம். சோழர்கள், விஜய நகர நாணயங்கள் பெரும்பாலானவற்றில் நாகரி எழுத்துப் பொறிப்புக்கள் இடம் பெறுகின்றன. எனவே, இவை ஒரு இடத்தில் அச்சடிக்கப்பட்டு மற்ற இடங்களுக்கு வணிகர்கள் மூலமோ, பிற சாதனங்கள் மூலமோ அனுப்பப் பட்டிருக்கலாம். அந்த இடங்களின் நாணயச் சாலைகள் தமிழக அரசர்களின்

கட்டுபாட்டின் கீழ் இருந்திருக்கலாம். தமிழக, கர்நாடக, ஆந்திர மாநிலங்களிலிருந்தும் கூட தமிழகத்திற்கு நாணயங்கள் தருவிக்கப்பட்டு அவை இங்கு அச்சிட்ட நாணயங்களுடன் புழங்கியிருக்கவும் கூடும். இராஜராஜனது தஞ்சை கல்வெட்டில் பல ஊர்களிலிருந்தும் வரி காசாக பெறப்பட்டதை அறிய முடிகிறது. அதில் கர்நாடக மாநில மைசூர் படிநாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முடிவாக, கருவூகலத்தில் நாணயம் அச்சிட்டுள்ளனர் என்பதை வாலிகண்டபுரம் கல்வெட்டு ஒன்றை மாத்திரமே சான்றாகக் கொண்டு உறுதியாக கூறு இயலாது. முன்பே குறிப்பிட்டதுபோல் இதில் கருவூக்குலம் என்றே எழுதப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இதை கருமார் குலமான கம்மாளரால் அடிக்கப்பட்ட பணமாகக் கருதி அக்கசாலையருடன் தொடர்புபடுத்தவும் கூடும் எனவே இதுபோன்றச் சான்றுகள் அதிக அளவில் கிடைக்கும் வரையில் அக்க சாலைகளையே நாணயங்கள் அச்சடித்த இடமாக கருதுவதே பொருத்தமாகும்.

துணை நூற்பட்டியல்

1. ஆர். கிருஷ்ணமூர்த்தி, பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், 1990, பக்.
2. R. Nagasamy, *Tamil Coins A Study,* 1981, pp.9-10.
3. B.D. Chattopadhyaya, *Coins and Currency Systems in South India,* 1997, p.62
4. C.H. Biddulph, *Coins of the Pandyas Numismatic notes and Monograph,* 1966, pp.40-48.
5. R. Vanaja, *The Ceylon - Man Coins and the Lankeshvara Series - A Reapprai sal,*
6. B.D. Chattopadhyaya, *Coins and Currency Systems in South India,* 1977, p.62.
7. கே.ஏ.என். நீலகண்ட சாஸ்திரி. சோழர்கள்.
8. நடன காசிநாதன், தமிழர் காசியல். 1995.
9. Accession No. 1309 வலங்கைமான் 105 நாணயங்கள்
   Accession No. 1375 வலங்கைமான் 570 நாணயங்கள்
   Accession No. 1375 தேவக்கோட்டை 338 நாணயங்கள்
10. N. Ramesan
11. N. Sankaranarayanan
12. Balakrishna Nayar, *Dowleeshwaram Hoard,* 1966, pp.19-22..

13. Girijapathi, Ganesan, *Vijayanagara Coins*, 1999, p.21 (52 Grains=3.4 gms).

14. F.R.S. Edward Thomas, Ancient Indian Weights, pp. 65-70.

15. S.K. Maity, *Economic Life in Northern India in the Guptha Period*, A.D. 300-500, 1970, pp.220-221.

16. Maclean, *Manual of the Administration of the Madras Presidency* Vol.III, 1990, pp.592-593.

17. Codrington, *Ceylon Coins And currency: Memoirs of The Colombu Museum*, 1924, p9.

18. Maclean, *Manual of the Administration of the Madras Presidency* Vol.III, 1990, pp. 592-593.

19. Elliot, Walter, *Coins of Southern India*, 1886, pp.45-52.

20. ஆறுமுக சீதாராமன். *காலத்தை வென்ற சோழர் கால எடைகள்.* தினமணி 4.8.2000

21. குன்றியின் தாவரவியல் பெயரும், எடையும், தொல் அறிவியல் துறை இணைப் பேராசிரியர்களான திருமதி பரிமளா மற்றும் திரு. இராஜேந்திரன் ஆகியோரிடம் நேரிடையாக கேட்டு பெறப்பட்டது.

22. S.K. Chakraborthy, *A Study of Ancient Indian Numismatics*, 1973, pp. 52-53.

23. Malini Dias, *The Aka Coins of Sri Lanka Synopsis presented at Numismatic Seminar*, held at Madurai, 1991.

24. சொ. சாந்தலிங்கம், *தொல்லியல் கண்டுபிடிப்புக்கள்*, 1984–1995. பக்.7.

25. பரமு. புஸ்பரட்ணம், *தொல்லியல் நோக்கில் இலங்கை பண்பாடு.* 2000. பக். 172–184.

26. R. Nagasamy, *Tamil Coins*, 1981, p.83.

27. Natana Kasinathan, *Kandagopalan madai*, SSIC. Vol.I, 1991, pp.87-90.

28. N. Ramesan, *A Catalogue of the Vijayanagar Coins of the Andhra Pradesh Govt. Museum*, 1962, p.49.

29. N. Ramesan, *A Catalogue of the Vijayanagar Coins of the Andhra Pradesh Govt. Museum*, 1962, p.49.

30. N. Ramesan, A Catalogue of the Vijayanagar Coins of the Andhra Pradesh Govt. Museum, 1962, p.49.

31. க.ஆ. 1913 எண். 141.

32. க.ஆ. 1911 எண். 217.

33. K.V. Raman, P. Shanmugam, *Terracotta Coin moulds from Kanchipuram*, SSIC Vol.I, pp.23-28.

34. D.C. Sircar, *Indian Epigraphical Glossary,* 1966, pp.13-14.

35. சிலப்பதிகாரம் 16 126 வரை

36. தெ.க.தொ.23. எண்.134. தெ.க.தொ.24 எண்.267. தெ.க.தொ.8. எண்.460–462. தெ.க.தொ.6. எண்.439. தெ.க.தொ.5. எண்.555. கல்வெட்டடு ஆண்டறிக்கை 1943–44. எண்282. செ. இராசு கொங்கு கல்வெட்டுக்கா–9 ஆவணம் 7 தொ.7 1996 ப.33. எ. சுப்பராயலு நாகபட்டினம் சூடாமணி விஹாரத்தைச் சேர்ந்த ஒரு புதிய புத்தர் படிமம் ஆவணம் தொ.3 1999. ப.45.

37. தெ.க.தொ.5. எண்.555.

38. தெ.க.தொ.24. எண்.267.

39. தெ.க.தொ.6 எண்.439.

40. தெ.க.தொ.5. எண்.555.

41. P. Shanmugam, *Minting In Tamil Nadu,* SSIC, Vol.5, 1995, pp.99-103.

42. க.ஆ. 1943–44; எண்:282.

43. கல்வெட்டுப் பாடப் பொருளின் கையெழுத்துப் பிரதி கையெழுத்துப் பிரதி, தமிழ்ப் பல்கலைக்கழக, கல்வெட்டியல், தொல்லியல் துறை பேராசிரியிர் ஓய் சுப்பராயலு, அவர்களிடமிருந்து பெறப்பட்டு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

44. Y. Subbarayaly, *"Vallam Inscriptions"*, Tamil Civilization Vol.2. No.4. p.11.

45. K.G. Krishnan, *"Minting Industries and Process of Coining. in Tamil Nadu"*, SSIC-Vol.1; pp9-16.
P. Shanmugam, *"Mints In Tamil Nadu"* SSIC. Vol.5 pp.99-103.

46. P.B. Desai, *"Minting in Medieval Karnataka"* Indian Economic History Congress Session - pp.211-24.
100 பொன் உருவாக்க 34 பணம் கோயிலிற்கு செலுத்தப் பெற வேண்டும் என்னும் 1 மா பணம் 2.631 பணத்திற்குச் சமம் என்றும் திரு.பி. சண்முகம் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டு கணிப்பின்படி 100 பொன்னிற்கு 3/5யே 4 மா பணமே வருகின்றது. மா என்பது பணத்திற்கு குறைந்த பின்னமாகும். 1 மாவிற்குச் சமமானதாக 2.6 பணத்தை கணித்திருப்பது ஏற்பத்தக்கதல்ல.

தார்வார் மாவட்டம் லோக்கண்டியில் நாணயச்சாலை இருந்ததற்கான ஆதாரங்கள் கி.பி. 12–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அதன் முடிவு வரையிலான சாளுக்கிய கல்வெட்டுக்கள் வாயிலாகத் தெரிகின்றது. நாணயச்சாலை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. அதன் உரிமை தனியாரிடம் இருந்தது. தனது அலுவலர்களை கொண்டு ஒழுங்குப்படுத்துவதன் மூலம் அரசு தனது கட்டுப்பாட்டை செயல்படுத்தியது. நாணயங்கள் தயாரிக்கப்படும் இடங்கள் கமட என்று அழைக்கப்பட்டுள்ளது. இது கர்மன் என்ற வடமொழி

சொல்லிலிருந்து வந்ததாகும். இதற்கு தொழில் ஆலை அல்லது பட்டறை என்று பொருள். நாணய அச்சடிப்புடன் தொடர்புடைய கெணிகரா என்ற தொடர் கர்நாடக கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இவர்கள் தமிழில் ஆணிக்காரர் என்று குறிக்கப்படுகின்றனர். நாணயத்தின் தரத்தையும் அளவையும் ஆய்வு செய்வோர் நாணயங்களை தொழிற்சாலையிலிருந்து கணிசமான அளவு வாங்கி அதை புழக்கத்தில் விட்டுள்ளனர். பொத்தி கிரஹகா என்று அழைக்கப்பட்ட நாணயப் பைகளை சேகரிப்போர் இருந்துள்ளனர். நாணய நடைமுறைகளில் பத்ரஹஸ்தாஅகு என்ற ஆவண கையொப்பாளரும் இருந்துள்ளார். லோக்கண்டியில் அடிக்கப்பட்ட நாணயங்கள் லோக்கி காத்யானா என்று அழைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி ஹரியாகோபர் சுதி, போன்ற இடங்களிலும் நாணயங்கள் தயாரிக்கப் பெற்றுள்ளன.

கம்மட்ட அதிகாரி, கம்மடகாரா, சவத் சத்கரா போன்ற அதிகாரிகள் கி.பி.1109 ஆம் ஆண்டைச் சேர்ந்த சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தியனின் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். தார்வார் மாவட்ட சுதியில் உத்த வோஜா என்ற பொற்கொல்லர் நாணயங்களை ஒருக்குறிப்பிட்ட தரத்தில் வெளியிடும் உரிமையினைப் பெற்றுள்ளார். இங்கு அச்சிடப் பெறும் நாணயங்களுக்கு அவ்விடத்தை குறிப்பிடும் வண்ணம் தனிச்சின்னம் பயன்படுத்தியுள்ளனர். தமிழகத்து அக்கசாலை ஈஸ்வரர் போன்று கர்நாடகத்தில் கமடேஸ்வரர் என்பது அக்கசாலை கடவுளாக இருந்துள்ளது. கி.பி.11,12 ஆம் நூற்றாண்டுகளில் குடதினி, பெட்டதம்பலம் போன்ற இடங்களிலும் நாணய மையங்கள் செயல்பட்டுள்ளன. 1098 இல் குடிதினியில் மயில் சின்னம் இட்டு நாணயங்கள் வெளியிட்ட இரு பொற்கொல்லர்களைப் பற்றி கர்நாடக கல்வெட்டுக்கள் நவில அச்சின பொன் என்று உரைப்பதாக தேசாய் குறிப்பிடுகின்றார். நாணயங்கள் அச்சடிக்க பயன்படும் ஆணி தயாரித்த பொற்கொல்லரை கம்மட்ட அச்சின மொலேயா அக்ஷாதிகாரு என்று கர்நாடக கல்வெட்டுக்களில் குறிப்பிடப் படுகின்றன.

47. N. Ramesan, *A Catalogue of the Vijayanagar Coins of the Andhra Pradesh Govt. Museum*, 1962. p.52.

48. தெ.க.தொ.2, எண்.92.

26

One Rupee Coins of British India (From 1835 to 1947)

*S.B. Raja Seetharaman**

Introduction

Kautilya's Arthasasthra (4th century B.C.) tells that coins of Gold (Suvarna Rupa), Silver (Rajatha Rupa), Copper (Tamra Rupa), and Lead (Sisa Rupa) were used. Rupee - the basic monetary unit of India derived its name from the Sanskrit word "Rupya".

Even though the Mauryas and other rulers used silver coins for public circulation for many centuries, the standardized rupee in the form of "Rupiyah" was introduced only by Sher Shah Suri, (the Sultan of Hindustan - Reign period 1539 - 1545 A.D.) in the form of silver coin. The weight of this silver coin was standardized at troy 180 grains. The gold and silver currency was fixed at the ratio 1:15 (1 Gold Mohur = 15 Silver Rupees). Basically, the intrinsic value of the metal was the main criteria in fixing the weight standards of the gold and silver coins. Sher Shah Suri's rupee coinage system outlived him for the next 5 centuries and his successors like Mughal emperors, French, Portuguese and British governments, many Indian Princely States and Republic of India issued one rupee coins. The size, weight, metal composition, inscriptions and devices on these one rupee coins varied during the above said periods, but the nomenclature 'Rupee' remained the same, even today.

For centuries these one rupee coins were hammer struck. However in early 18th century, machine struck coins came into circulation. Madras, Bombay and Bengal Presidencies issued one rupee coins, but varied in design, size, metal, weight, and created lot of confusion among the public and traders. Hence, it was decided to issue a uniform pattern of one rupee coins for circulation throughout the territories of British India. In the year 1835, an uniform coinage for the whole of British India was introduced and

---

* Member, Madras Coin Society, Chennai - 600 047
Old No. 120, New No. 58, Iyyamudali Street, Chinthadripet, Chennai - 600 002.

the erstwhile coins of three Presidencies ceased to be legal tender from that year onwards.

Under the uniform coinage, the first rupee coins were issued with the head picture of King William IV. After this issue, one rupee silver coins were issued for circulation in the names of Queen Victoria, Victoria Empress, King George V and King George VI. Madras, Bombay and Calcutta Mints struck these one rupee coins simultaneously. Coins were not struck in some years because they had adequate number of coins in circulation.

1) One Rupee Coin of King William IV - 1835 - 1837

James Princep (Assay Master of Calcutta Mint) who recommended for reforming the weights and measures, suggested that all the Company's Mints should strike one type of rupee coin to form the uniform coinage in the territories of the East India Company. His proposal for this which was submitted in 1833, was accepted by the then Governor General of India Lord William Bentinck. In 1834, the Mint Committee of the newly reconstructed Mint at Calcutta submitted to the Governor General, specimens of the new rupee bearing the portrait of William IV, the then king of Great Britain. From among these specimens, one specimen was selected for the new silver one rupee coin, in 1835, a new rupee silver coin came into circulation (replacing the Mughal type) with the portrait of King William IV on the obverse and the value in Persian, and English with the legend "East India Company" on the reverse. The details of the new coinage were laid down by Act XVII of 1835. The one rupee coin of William IV was issued by the East India Company and is so inscribed on the coins. The designer and engraver of the head design in William IV rupee coin was William Wyon, the chief engraver at the Royal Mint, London. According to the prevailing British custom, the king's head (and not his bust) was depicted on the rupee coins. Though King William IV, died on 20th June 1837 his coins were in circulation even after that till Queen Victoria coins were issued in 1840. Normaly the numeral 4 is inscribed as IV. Whereas in the William one rupee coin, IV is inscribed as IIII.

2) One Rupee Coin of Queen Victoria - 1840 - 1861

Upon the death of her uncle King William IV, Queen Victoria ascended the throne and was crowned in 1838. She reigned until

22nd January 1901. From 1840 onwards the rupee coins bore Queen Victoria's portrait without the crown on the obverse. The rupee coins bearing the year 1840 can be classified into two types.

a) First Type : The Portrait of the young Queen Victoria is depicted without the crown on the obverse of the coin with continuous legend above the Queen's head. The weight of the coin was 180 grains troy with the silver composition 917.8 per mille. The diameter of the coin was 1.3 inches with the edge of the coin being milled. The coins were struck at Calcutta Mint, Bombay Mint, and Madras Mint.

b) Second Type : The portrait of the young Queen Victoria is depicted without the crown on the obverse of the coin with divided legend around Queen's head. The weight of the coin was 180 grains troy with the silver composition 917.4 per mille. The diameter of the coin was 1.2 inches with the edge being milled. The coins were struck at Calcutta Mint, Bombay Mint, and Madras Mint.

3) One Rupee Coin of Queen Victoria (1862 - 1876)

After the Indian War of Independence of 1857 (Indian Mutiny), the role of the East India Company ended and the British Crown assumed power over India. The first coinage of India under the British crown came into existence in the year 1862, when Queen Victoria became the first Monarch whose likeness adorned coins of all denominations. These coins had the bust of Queen Victoria wearing an imperial crown and richly embroidered robes with the legend "Victoria Queen" (Victoria to the left and Queen to the right). The reverse of the coins were of a different pattern. Coins with Queen Victoria's bust were issued during 1862 - 1876, when her Majesty was the Queen of Great Britain and Colonies, which included India. The fineness of the silver coin was reduced from 917.4 to 916.6 per mille. One rupee coins of Queen Victoria were struck at Calcutta, Bombay and Madras Mints from 1862 to 1874. The One rupee coins were struck with the year unchanged until 1874.

However in 1863, Bombay Mint adopted a method of adding dots or beads to its dies to indicate the exact year of minting for the 1862 one rupee coin. Generally, adding a dot to the 1862 coin refers to 1863, adding 2 dots refers to 1864, and adding 12 dots refers to the year, 1874. In 1873 & 1874, the Mint also adopted top

dot / bottom dot for the one rupee silver coins to distinguish the year of minting.

4) One Rupee Coin of Victoria Empress (1877 - 1901)

On Queen Victoria's assumption of the title "Empress of India" on 1st January 1877, the coinage of the country underwent a further change. The inscription on all coins including the one rupee silver coin was changed from Victoria Queen to Victoria Empress. The design on the obverse / reverse in the new series were exactly similar to their counterparts in 1862 - 1876 series but for the change in the legend. The Victoria Empress one rupee coins were struck at Calcutta Mint and Bombay Mint.

5) One Rupee Coin of King Edward VII (1901 - 1910)

King Edward VII ascended the throne, on the death of his mother Victoria Empress on 22nd January 1901 and his coronation was held on 9th August 1902. In the history of India Coinage, the reign of King Edward VII is of special significance, as it was during his reign only, that a comprehensive law containing the provision for coinage was enacted. In fact the Indian Coinage Act of 1906 as amended from time to time, still governs the minting operations in the country. One rupee coins struck in the year 1901 came for circulation showing the Victoria Empress portraits. Coins bearing King Edward VII portrait were issued only from 1903. The head picture of King Edward VII on the coin showed the king facing the right. King Edward VII one rupee coins were struck at Calcutta Mint and Bombay Mint.

6) One Rupee Coin of King George V (1910 - 1936)

King George V ascended the throne after the demise of his father King Edward VII on 6th May 1910. His coronation was held on 22nd June 1911, and it was recorded that 98,000 one rupee silver coins were melted at the Calcutta Mint for casting 2 silver thrones for the use of King and Queen Mary at the Durbar held in Delhi. His reign is noted for some very interesting changes in the coinage of the country.

The one rupee coin with the year 1911 having the portrait of George King Emperor was withdrawn by the government. It was decided to issue a rupee coin on the occasion of King George V coronation. After the issue of 1911 rupee of King George V, there was objection from the public towards the design of the tiny

elephant on the robes of the Royal bust because, with the short trunk and legs it looked like a pig due to an oversight in designing. Consequently, the circulation of this rupee coin was decided to be withdrawn and the government had therefore to suspend minting of these coins. Thus the coins already minted became scarce coins. Out of a total of 9.4 million silver one rupee coins struck, only 7 lakh coins had been issued for public circulation. The remainder, and those withdrawn from circulation were melted down by the government. In 1912, the dies of the one rupee coin were altered and the figure of elephant was made clear with a proportionate trunk. Hence the one rupee coins with the year 1912, was widely accepted by the public. Since 1911 one rupee coin had the picture of pig, it is popularly known as "Pig Rupee".

One rupee coins bearing the portrait of King George V showed the King's crowned head facing left. Coins with his bust were issued from 1911 to 1936 bearing his crowned bust on the obverse with the legend King & Emperor George V depicted on the coin. King George V one rupee coins were struck at Calcutta Mint and Bombay Mint.

7) One Rupee Coin of King George VI (1936 - 1947)

After the demise of King George V, his son King George VI ascended the throne on 11th December 1936 and was crowned on 12th May 1937. Coins minted from 1st November 1938 were showing King George VI portrait. During his reign, India attained freedom and the last Indian coinage with his portrait was issued in the year 1947. King George VI died on 6th February, 1952 and the Indian coinage severed relations once and for all with the Kings and Queens after King George VI. All one rupee coins of King George VI show the King's crowned head facing left, like those of King George V. One rupee coins issued during the period of King George VI can be classified into three categories.

Coins issued during 1938 - 1939	(Full Silver)
Coins issued during 1940 - 1945	(Half Silver)
Coins issued during 1947	(Pure Nickel)

Due to World War II in 1939, there was a shortage of silver in the market and hence one rupee coins were minted with half silver (50% Silver) from 1940 - 1945. Moreover, due to inadequate availability of silver in the open market and the high prices of this

metal prevailing in India, finally it was decided to mint one rupee coins in pure nickel and nickel one rupee coins with King George VI head picture came into circulation in 1947. The 1947 one rupee coin had on its front side the engraving of the Indian Tiger along with the year of issue. According to the available records, during the period August 1947 - March 1950, all the three mints (Bombay, Calcutta, Lahore) struck King George VI coins with the frozen year 1947. The lahore Mint came into operation in October 1943 and continued striking one rupee coins upto September 1948, though the actual control of the Mint had been transferred to the Government of Pakistan from 15th August 1947.

Conclusion

Thus the long era of the silver one rupee, which was systemised by Sher Shah Suri, popularised by Mughal Emperors, was standardised by the British Government. The last rupee coin containing full silver was struck in 1939 and after which rupee coin was struck in Half Silver upto 1945, the year in which World war II ended. After 1945, the rupee was struck in pure nickel. During its silver reign, the rupee was so popular that some of the countries (Maldives, Pakistan, Seychelles, Indonesia, Afghanistan, Ceylon, Burma, Kenya, Mauritius, Tibat, German East Africa, etc.,) with which India traded adopted the Rupee Standard. From the 15th century, the Rupee in the form of coin has been irreplaceable. The Rupee coin has seen the rise and fall of many empires but the nomenclature of rupees may continue for centuries to come.

References :

1. Parameswarlal Gupta, *'Coin'*.
2. D. Chakravarthy, *19th & 20th Century Coins of India.*
3. Left Comdr. K.V. Singh.

CHECKLIST FOR ONE RUPEE NOTES OF GOVERNMENT OF INDIA (POST INDEPENDENCE PERIOD)

S. NO.	YEAR	SIGNED BY	DESIGNATION	INSET	PREFIX	COLOUR	SIZE
1	1949	K.R.K. Menon	Secretary	....	A - C	Grey Green	64 x 101 MM
2	1950	K.G. Ambegaonkar	Secretary	....	C - Q	Grey Green	64 x 101 MM
3	1951	K.G. Ambegaonkar	Secretary	....	A - M	Grey Green	64 x 101 MM
4	1951	K.G. Ambegaonkar	Secretary	....	A - N	Violet	64 x 101 MM
5	1951	H.M. Patel	Secretary	....	P - Z	Violet	64 x 101 MM
6	1951	H.M. Patel	Secretary	A	A - G	Violet	64 x 101 MM
7	1957	H.M. Patel	Secretary	A	G - L	Violet	64 x 101 MM
8	1957	H.M. Patel	Principal Secretary	A	L - Z	Violet	64 x 101 MM
9	1957	A.K. Roy	Secretary	B	A - X	Violet	64 x 101 MM
10	1957	L.K. Jha	Secretary	B	Y	Violet	64 x 101 MM
11	1957	L.K. Jha	Secretary	C	A - Y	Violet	64 x 101 MM
12	1957	L.K. Jha	Secretary	D	A - Y	Violet	64 x 101 MM
13	1963	L.K. Jha	Secretary	A	A - Y	Violet	64 x 101 MM
14	1964	S. Bhoothalingam	Secretary	B	A	Violet	64 x 101 MM
15	1965	S. Bhoothalingam	Secretary	B	A - J	Violet	64 x 101 MM
16	1966	S. Bhoothalingam	Secretary	....	A - Y	Violet	63 x 97 MM
17	1967	S. Jagannathan	Secretary	A	A - V	Violet	63 x 97 MM
18	1968	S. Jagannathan	Secretary	A	V - Y	Violet	63 x 97 MM
19	1968	I.G. Patel	Special Secretary	B	A - T	Violet	63 x 97 MM
20	1969	I.G. Patel	Special Secretary	B	U - Y	Violet	63 x 97 MM
21	1969	I.G. Patel	Special Secretary	C	A - G	Violet	63 x 97 MM
22	1969	I.G. Patel	Special Secretary	....	A - T	Violet	63 x 97 MM
23	1970	I.G. Patel	Secretary	C	G - S	Violet	63 x 97 MM
24	1971	I.G. Patel	Secretary	C	T - Y	Violet	63 x 97 MM
25	1971	I.G. Patel	Secretary	D	A - K	Violet	63 x 97 MM
26	1972	I.G. Patel	Secretary	D	L - Y	Violet	63 x 97 MM
27	1972	I.G. Patel	Secretary	E	A - K	Violet	63 x 97 MM
28	1973	M.G. Kaul	Secretary	E	L - Y	Violet	63 x 97 MM
29	1973	M.G. Kaul	Secretary	F	A- J	Violet	63 x 97 MM

S. NO.	YEAR	SIGNED BY	DESIGNATION	INSET	PREFIX	COLOUR	SIZE
30	1974	M.G. Kaul	Secretary	F	K - Y	Violet	63 x 97 MM
31	1974	M.G. Kaul	Secretary	G	A- J	Violet	63 x 97 MM
32	1975	M.G. Kaul	Secretary	G	K - Y	Violet	63 x 97 MM
33	1975	M.G. Kaul	Secretary	H	G - F	Violet	63 x 97 MM
34	1976	M.G. Kaul	Secretary	H	F - Y	Violet	63 x 97 MM
35	1976	M.G. Kaul	Secretary	I	A- D	Violet	63 x 97 MM
36	1976	Manmohan Singh	Secretary	....	A- N	Violet	63 x 97 MM
37	1977	Manmohan Singh	Secretary	....	P - W	Violet	63 x 97 MM
38	1978	Manmohan Singh	Secretary	A	A- L	Violet	63 x 97 MM
39	1979	Manmohan Singh	Secretary	A	M - N	Violet	63 x 97 MM
40	1980	Manmohan Singh	Secretary	A	P - T	Violet	63 x 97 MM
41	1980	R.N. Malhotra	Secretary	A	U - W	Violet	63 x 97 MM
42	1980	R.N. Malhotra	Secretary	B	A - D	Violet	63 x 97 MM
43	1981	R.N. Malhotra	Secretary	....	A - H	Multi colour	63 x 96 MM
44	1981	M Narasimham	Secretary	....	K - L	Multi colour	63 x 96 MM
45	1983	Pratap Kishan Kaul	Secretary	....	A - B	Multi colour	63 x 96 MM
46	1984	Pratap Kishan Kaul	Secretary	....	C - F	Multi colour	63 x 96 MM
47	1985	Pratap Kishan Kaul	Secretary	....	G - K	Multi colour	63 x 96 MM
48	1985	S. Venkitaraman	Finance Secretary	....	L - W	Multi colour	63 x 96 MM
49	1986	S. Venkitaraman	Finance Secretary	A	A - L	Multi colour	63 x 96 MM
50	1987	S. Venkitaraman	Finance Secretary	A	M - Q	Multi colour	63 x 96 MM
51	1988	S. Venkitaraman	Finance Secretary	A	R - U	Multi colour	63 x 96 MM
52	1989	S. Venkitaraman	Finance Secretary	A	V - W	Multi colour	63 x 96 MM
53	1989	Gopi Arora	Finance Secretary	B	A - C	Multi colour	63 x 96 MM
54	1990	Bimal Jalan	Finance Secretary	B	D - G	Multi colour	63 x 96 MM
55	1991	S.B. Shukla	Finance Secretary	B	H	Multi colour	63 x 96 MM
56	1991	M.S. Ahluwalia	Secretary	B	K - M	Multi colour	63 x 96 MM
